பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 14 திங்கட்கிழமை 30.08.2021 கதிர் 298

### இனி இது ரகசியம் அல்ல!

நாயில் ஒட்டியிருக்கும் உண்ணியை அகற்றுவது என்பது சிரமமான காரியம். ஆனால் நாய் செத்தால் உண்ணி தன்பாட்டிலேயே கழன்று விடும். அதுதான் இயற்கை.

வலிமையாக இருக்க கோட்டா அரசின் செல்வாக்கு பக்கம்02

## யாழில் நேற்று ஐவர் கொரோனாவால் பலி

யாழ்ப்பாணம்போதனாவைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மூவர் உட்பட யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் ஐவர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்போதனாவைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நல்லூரைச் சேர்ந்த 69 வயதுடைய பெண் ஒருவரும், நெல்லியடியைச் சேர்ந்த 64 வயதுடைய ஆண் ஒருவரும், சுன்னாகத்தைச் சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, 2

# மேலும் 192 பேர் சாவு மொத்தக் காவு 8,775

## இலங்கையில் தொடரும் பேரவலம்

இலங்கையில் மேலும் 192 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 192 பேரில் 83 பெண்களும், 109 ஆண்களும் 2

# சுமந்திரனால் எடுக்கப்பட்ட முயற்சிகள் சரியான முறையிலேயே முன்னெடுப்பு

## தமிழரசுக் கட்யின் அரசியல் குழு வரவேற்பு விரைவில் மத்திய குழுவைக் கூட்டவும் முடிவு



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று இணைய வழியாக நடைபெற்றது. இதன்போது புதிய அரசமைப்பு, ஐ.நா. மாநாடு, அரசுடனான பேச்சு உள்ளிட்ட விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனால் இது வரைக்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் சரியான முறையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்றும், தொடர்ந்து அரசியல் குழு இவ்விடயங்களை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 2

## 4,612 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 4 ஆயிரத்து 612 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 26 ஆயிரத்து 169 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 204 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் 2

## வவுனியாவில் ஒரே நாளில் 206 பேருக்குக் கொரோனா

(வவுனியா நிருபர்)


வவுனியாவில் நேற்று 206 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், 2

## சிவப்பு சீனி 130 ரூபாவுக்கு!

### சதொச, கூட்டுறவு நிறுவனங்கள் ஊடாக விநியோகம்; புதன்கிழமை முதல் ஆரம்பம்



சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களினூடாக ஒரு கிலோகிராம் சிவப்புச் சீனியை 130 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசு அறிவித்துள்ளது. 10

## சீதுவையில் நேற்று மாலை 650 தொன் சீனி சிக்கியது!

நுகர்வோர் விவகார அதிகார சபையில் பதிவு செய்யாமல் சீதுவைப் பகுதியில் உள்ள இரண்டு களஞ்சியங்களில் இருந்து 6 இலட்சத்து 50 ஆயிரம் கிலோகிராம் (650 தொன்) சீனியை நுகர்வோர் விவகார அதிகார சபை நேற்று மாலை கைப்பற்றியுள்ளது.

இலங்கை விமானப் படை உளவுத்துறைக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, நுகர்வோர் விவகார அதிகார சபை இரண்டு களஞ்சியங்களையும் சோதனையிட்டபோது, இரண்டு 2

## அறுவரின் சடலங்கள் வீடுகளிலிருந்து மீட்பு

### கொரோனாத் தொற்று உறுதி

கட்டான பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 25ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் வீடுகளுக்குள் மரணமடைந்த அறுவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மரணமடைந்த 10

## யாழில் இரண்டாம் அலகு தடுப்பூசிகள் இன்று முதல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது அலகைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாவது அலகை வழங்கும் பணி இன்று ஆரம்பிக்கப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3ஆம் கட்டத்தின் முதலாவது தடவை தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த கடந்த ஜூலை மாத இறுதி முதல் நடைபெற்று வந்தன.

அவ்வாறு தமது 2

## தனிவழி செல்லும் சுதந்திரக் கட்சி; புதிய கூட்டணி மலரும் சாத்தியம்

### சிங்கள ஊடகம் பரபரப்புச் செய்தி



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசியலிருந்து விலகி, எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தலில் புதிய அரசியல் கூட்டணியாகப் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழு அண்மையில் கூடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது 10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மிக மோசமாகச் சரிந்து வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷவைப் புறம் ஒதுக்கி – உதாசீனப்படுத்தி – அதிகார பலத்துடன் கோட்டாபய ராஜபக்ஷ காய்களை நகர்த்தத் தொடங்கிய போதே கோட்டா அரசின் செல்வாக்குச் சரியத் தொடங்கி விட்டது. கொரோனாத் தொற்றுப் பரவுகையைக் கையாண்ட தவறினால் முழு நாட்டிலுமே அரசின் செல்வாக்கு அடியோடு சரிந்து வருகின்றது என்பது துலாம்பரமாகி விட்டது.

இனியென்ன? ஒட்டிக் கொண்ட உண்ணிகள் இனி மெள்ளக் கழற வேண்டியது தானே.

ஆளும் தரப்பில் – பொதுஜன பெரமுன கூட்டமைப்பில் – பிரதான கட்சி பொதுஜன பெரமுனதான். அடுத்த பெரிய கட்சி சு.க. அந்தக் கட்சியின் சார்பில் 14 எம்.பிக்கள் அரசில் உள்ளனர். மற்றைய பத்து உதிரிக் கட்சிகளின் சார்பில் பதினாறு எம்.பிக்கள் உள்ளனர். (விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி – 6 எம்.பிக்கள், வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி சார்பில் – 2 எம்.பிக்கள் மற்றும் அத்துரலிய ரத்ன தேரரின் அபே ஜன பல கட்சி, திஸ்ஸ விதாரணவின் லங்கா சமசமாயக் கட்சி, உதய கம்மன்பிலவின் பிவித்ரு ஹெல உறுமய, அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ், ரிரான் அலஸின் ஐக்கிய மக்கள் கட்சி, ஜி.வீரசிங்கவின் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அஸங்க நவரட்ணவின் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, குவிந்து குமாரதுங்கவின் யுதுகம தேசிய இயக்கம் ஆகியவை சார்பில் தலா ஓர் எம்.பி.)

இந்த இரண்டு தரப்புகளுமே – சு.கவும், ஏனைய பத்து சிறிய கட்சிகளும் – வெவ்வேறு காரணங்களுக்காக அரசை விட்டு வெளியேறும் முஸ்தீபில் உள்ளன.

அரசின் செல்வாக்குச் சரிந்து வருவது ஒரு பொதுக் காரணம் என்றாலும் அதை விட வெவ்வேறு காரணங்கள் இரண்டு தரப்புகளுக்குமே உள்ளன.

அரசுடன் இருந்தாலும், பல்வேறு விடயங்களிலும் வெளிப்படையாக அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதன் மூலம் ஏனைய பத்துக் கட்சிகளும் தங்கள் தனித்துவத்தைப் பேணி மக்கள் செல்வாக்கை வளர்த்து வருகின்றன. பொதுவான செல்வாக்கை இழக்கும் விதத்தில் ஆளும் தரப்பு எடுக்கும் முடிவுகள், தீர்மானங்களுக்குத் தாங்கள் உடந்தையில்லை, தாம் அவற்றை எதிர்க்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதன் மூலமும், ஆளும் தரப்பின் – மொட்டுக் கட்சியின் –செல்வாக்குச் சரிந்தாலும், தாங்கள் அதற்குக் காரணமல்லர் என்று தம்மை வெளிப்படுத்தி தங்களை அக்கட்சிகள் தற்காத்துக் கொள்கின்றன என சு.க. கருதுகின்றது.

தேவையில்லாமல், மொட்டுக் கட்சித் தரப்பின் நடவடிக்கைகளுக்குத் தலையசைத்து, அதனுடன் சேர்ந்து தங்களின் செல்வாக்கும் சரிவதாகக் கருதும் சு.க., இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக் கூட்டமைப்பிலிருந்து வெளிவேறுவது தமது கட்சியின் அடையாளத்தைப் பேணி தனித்துவத்தைத் தக்க வைக்க ஒரே வழி என சிந்திக்கத் தலைப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கட்சியின் தேசிய மாநாடு ஒக்டோபரில் வருகின்றது. அச்சயம் கட்சியின் தீர்க்கமான நிலைப்பாட்டை கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவரமாக அறிவிப்பார் என கட்சி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

*"என் கூற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள். நீண்ட காலம் இந்த ஆட்சியில் சு.க. நீடிக்காது"* – என்று உறுதிப்படக் கூறியது அந்த வட்டாரம்.

பதினாறு எம்.பிக்களை வைத்திருக்கும் பத்து சிறிய கட்சிகள் கூட ஆளும் தரப்பில் நீண்ட காலம் தாக்குப் பிடிக்கா என்று வேறு முக்கிய தரப்பு ஒன்று தெரிவித்தது.

வெளியேறுவதற்கு சரியான சமய சந்தர்ப்பம் பாத்திருக்கின்றன அக்கட்சிகள். ஜனாதிபதிக்கு ஏற்படக் கூடிய சீற்றம் அரசிலிருந்து தாங்கள் வெளியேறுவதற்கான சரியான சமய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும் என அவை நம்புகின்றன.

முப்பது எம்.பிக்களை வைத்திருக்கும் இந்த இரண்டு தரப்புகளும் அரசை விட்டு வெளியேறினாலும் அரசின் பெரும்பான்மை விழாது. அதற்கு சாதாரண பெரும்பான்மையை விட ஆறு முதல் பத்து எம்.பிக்கள் மேலதிகமாகவே இருக்கும். ஆனால் அரசமைப்பை மாற்றுதல் உட்பட பல விடயங்களுக்குத் தேவைப்படும் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பலத்தைத்தான் அரசுத் தரப்பு இழக்கும். மேற்படி இரண்டு தரப்புகளில் ஒன்று வெளியேறினாலும் கூட அதுதான் நிலைமை.

இந்த இரண்டு தரப்புகளினதும் வரும் செப்ரெம்பர் மாத அணுகுமுறைகள், நடவடிக்கைகள் நாட்டில் அதிரடித் தலைகீழ் மாற்றங்களுக்குக் கால்கோள் இட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★

நேற்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் மெய்நிகர் முறையிலான கூட்டத்தின் சமாச்சாரங்களை எதிர்பார்த்து இருப்பீர்கள். அவற்றை நாளை பார்ப்போம் வாசகர்களே.

அண்மைக் காலத்தில் கட்சியின் சார்பில் அதன் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் எடுத்த நடவடிக்கைகளுக்கு கூட்டத்தில் ஏகமனதான அங்கீகாரமும் ஆதரவும் கிட்டியமைதான் கூட்டத்தின் 'ஹைலைற்'.

வேறு விடங்களும் தாராளமாக உண்டு. அவற்றை நாளை பார்ப்போம்.

– மின்னல் –

## சுமந்திரனால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கூட்டம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.15 வரை இணைய வழியாக நடைபெற்றது

கூட்டத்தின் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் துணைவியார் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசாவின் மறைவுக்கும், மற்றைய உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசனின் பேத்தியாரின் மறைவுக்கும் கட்சியின் அனுதாபங்களைத் தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நாம் அனுப்பிய யோசனைகளைத் தொடர்ந்து அந்தக் குழுவை நாம் சந்தித்துப் பேசிய விடயங்கள் பரிமாறப்பட்டன.

அந்தக் குழுவுக்கும் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் நடந்த கடிதப் போக்குவரத்தும் அதைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கு அழைத்தமையும் அது பிற்போடப்பட்டமையும், இந்தப் பின்னணியில் நடைபெற்ற தொடர்பாடல்களின் விபரங்களும் விளக்கிக் கூறப்பட்டன.

அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸுக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பிக்கும் இடையில் நடைபெற்ற உரையாடலும் இதில் அடங்கும்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருக்கும் தருணத்தில் இந்த முயற்சிகளின் தாக்கங்கள் குறித்தும், இந்த முயற்சிகளில் இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஈடுபாடு குறித்தும் ஆழமாக ஆராயப்பட்டது.

இறுதியில் இதுவரைக்கும் எடுக்கப்பட்ட முயற்சிகள் சரியான முறையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்றும், தொடர்ந்து அரசியல் குழு இவ்விடயங்களை ஆராய்ந்து ஆலோசனைகள் வழங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்படவிருக்கும் அறிக்கை சம்பந்தமாகவும் உரையாடப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான உரையாடல்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியால் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் பலரால் முன்வைக்கப் பட்டது.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பலரது ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய விளக்கங்களும் அறிவிக்கப்பட்டன.

வெகுவிரைவில் மத்திய செயற்குழுவை கூட்டுவது என்ற தீர்மானத்தோடு கூட்டம் நிறைவடைந்தது – என்றுள்ளது.

## சீதுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களஞ்சியங்களின் முகாமையாளர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், சீனியும் கைப்பற்றப்பட்டது. இரண்டு களஞ்சியங்ளுக்கும் சீல் வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸாநாயக்கவின் அறிவுறுத்தலின் பேரில் கொழும்பு மாவட்ட புலனாய்வு பிரிவின் தலைவர் பிரதீப் களுதரஆராச்சி உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்த சோதனைகளை மேற்கொண்டது.

## யாழில் இரண்டாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முதலாவது அலகு தடுப்பூசியினை பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கான இரண்டாவது அலகு தடுப்பூசிகள் இன்று ஓகஸ்ட் 30ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு முன்பு வழங்கப்பட்டதன் படியே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படும்.

தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விவரங்கள் அப்பிரதேசத்திற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும்.

தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும்.

பொதுமக்கள் இரண்டாவது அலகு தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்குச் செல்லும்போது முதல் அலகு தடுப்பூசி பெற்றுக்கொண்டமையை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் வழங்கப்பட்ட அட்டையை எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு அழைத்து வர முடியாத நிலையில் படுக்கையில் உள்ள நோயாளர்களுக்கு முதல் தடவை வழங்கப்பட்டதைப் போன்றே அவர்களது வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கான தடுப்பூசியானது தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இறுதி நாள்களில் வீடுகளுக்குச் சென்று வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிலவகை மருந்துகள், ஊசிமருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும், மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பளை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற ஆதார மருத்துவமனைகளில் முதல் தடவை வழங்கப்பட்டதைப் போன்றே செப்டெம்பர் மாதம் 4 ஆம், 11ஆம் திகதிகளில் இரண்டாவது அலகு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு வழங்குவதற்காக பிரத்தியேகமாக தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன – என்றுள்ளது.

## 4, 612 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 57 ஆயிரத்து 598 ஆக உயர்வடைந்துள்ளது.

## மேலும் 192 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 775 ஆக அதிகரித்துள்ளது.

## யாழில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு பெண்கள் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளனர். வைத்தியசாலைக்கு நேற்று அதிகாலை அழைத்துச் செல்லப்பட்ட இரண்டு பெண்கள் வைத்தியசாலை வளாகத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர், பருத்தித்துறையைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் பெண் என்றும், மற்றையவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 69 வயதுடைய வயோதிபப் பெண் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இருவரும் காய்ச்சலுடன் மூச்சுத் திணறிய நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 236ஆக உயர்வடைந்துள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 206 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# சுவிஸ் அதிகாரிகள் அலட்சியம் இலங்கைப் பெண் உயிரிழப்பு

சுவிஸ் சிறையில் தற்கொலைக்கு முயன்று அதிகாரிகளின் அலட்சியத்தால் உயிரிழந்த இலங்கைப் பெண் தொடர்பான வழக்கின் சந்தேகநபர்களை விடுவித்து குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

29 வயதான இலங்கைப் பெண் ஒருவரின் புகலிடக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டு நாடு கடத்தப்படவிருந்த நிலையில் வாகோஃப் சிறையில் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதன்போது, குறித்த சம்பவம் சிறைச்சாலையிலுள்ள கண்காணிப்பு கமராவில் தெரியவர, இரவுப் பணியில் இருந்த பெண் ஊழியர் ஒருவர் உட்பட நால்வர் அவரை மீட்டு உரிய மருத்துவ சிகிச்சையை உடனடியாக ஏற்பாடு செய்ய தவறியுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்று சுமார் 18 நிமிடங்களுக்கு பின்னரே அவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு மூளையில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சை பலனின்றி இரண்டாவது நாள் உயிரிழந்திருந்தார்.

இந்த விவகாரத்தில் ஒரு பெண் ஊழியர் உட்பட நான்கு சிறைக் காவலர்களின் கவனக்குறைவின் காரணமாகவே பெண் உயிரிழந்தார் எனக் கூறி குற்றவியல் நடவடிக்கையென வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு பேஸல் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குறித்த நால்வரையும் விடுவித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரையும் விடுவித்துள்ள நீதிமன்றம், இதுபோன்ற ஒரு சம்பவம் கண்டிப்பாக நடந்திருக்க கூடாது எனவும், இது அரசு, நீதித்துறை மற்றும் சிறை அமைப்பின் தோல்வி எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஒக்டோபர் 3 வரை நாட்டை முடக்கினால் 10 ஆயிரம் உயிர்கள் காப்பாற்றப்படலாம்!

## பத்மா குணரத்ன ஆருடம்

உலக சுகாதார ஸ்தாபனத்தின் எதிர்வு கூறலின்படி செப்ரெம்பர் 18 ஆம் திகதி வரை நாடு முடக்கப்பட்டால் 7 ஆயிரத்து 500 உயிர்களைக் காப்பற்ற முடியும்.

அதே போன்று ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை நாடு முடக்கப்படுமானால் மேலும் 10ஆயிரம் உயிர்களைப் பாதுகாக்க முடியும் என்று இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

டெல்டா திரிவின் புதிய மாறுபாடுகள் ஏனைய மாகாணங்களுக்கும் நிச்சயம் பரவக் கூடும் என்று எச்சரித்துள்ள வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன, தற்போது நாடு செல்லும் வகையில் தொற்றைக் கட்டுப்படுத்த முடியுமா என்பது சந் தேகத்திற்குரியதாகும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

டெல்டா பரவல் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கில் மக்கள் செயற்படும் விதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொழும்பில் நூறு வீதம் டெல்டா திரிவே பரவியுள்ளது. டெல்டா திரிவு மாற்றமடைந்து புதியதொரு மாறுபாடே கொழும்பில் அதிகளவில் பரவுகிறது. இந்த புதிய திரிவு ஏனைய மாகாணங்களுக்கும் பரவும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் எதிர்வு கூறலின்படி செப்டெம்பர் 18 ஆம் திகதி வரை நாடு முடக்கப்பட்டால் 7 ஆயிரத்து 500 உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

அதே போன்று ஒக்ரோபர் 3 ஆம் திகதி வரை நாடு முடக்கப்படுமானால் மேலும் 10ஆயிரம் உயிர்களைப் பாதுகாக்க முடியும். இதனைக் குறித்த எதிர்வுகூறல் அறிக்கை மூலம் அரசாங்கத்திற்கும் அறிவித்துள்ளோம் எனவும் அவர் கூறினார்.

# அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி செலுத்திய பின் வைத்தியருக்கு மூளையில் இரத்தம் உறைவு

இலங்கையில் கொவிட் தடுப்பூசி செலுத்திக் கொண்ட வைத்தியர் ஒருவருக்குபாதிப்புஏற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொவிட்தொற்றைத்தடுப்பதற்காக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி பெற்ற பின்னர் தனது மூளையில் இரத்தம் கட்டியதாக வைத்திய பரிசோனை நிறுவனத்தின் பிரதி இயக்குநர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார். தற்போது மோசடியாளர்களால் சுகாதார அமைச்சு பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சிற்கு தொடர்புடைய அனைவரும் இன்று வரையில் வியாபாரம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். கொவிட் பரிசோதனையில் கொள்ளையடித்து மோசடி வியாபாரம் ஒன்றே மேற்கொள்ளப்படுகின்றது. சுகாதார அமைச்சால் சரியான தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் வெளியே மாற்றம் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இணையத்தள செய்தி சேவை ஒன்றுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு பிரதி இயக்குநர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

# கடந்த ஆறுமாத காலமாக ஒருநாள்கூட கடமைக்குச் செல்லாத பல ஆசிரியர்கள்

## பொது நிர்வாக அமைச்சகம் தகவல்

கடந்த ஆறு மாதங்களில் ஒரு நாள் கூட வேலைக்குச் செல்லாத ஏராளமான ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் அரச ஊழியர்கள் இருப்பதை பொது நிர்வாக அமைச்சகம் வெளிப்படுத்தியுள்ளது.

எனினும், அவர்கள் அனைவருக்கும் செலுத்த வேண்டிய சம்பளம் வழங்கப்பட்டதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது. கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நிர்வாகிகள் கடமைக்காக அறிக்கை அளித்து போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளைப் பெற்றுள்ளனர். அவர்கள் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் மட்டுமே பணியிடத்தில் இருந்திருக்கிறார்கள். இதனிடையே கொவிட் பெருந்தொற்று காரணமாக, சில தனியார் நிறுவனங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு சம்பளம் வழங்குவதை மட்டுப்படுத்தியுள்ளதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் பெரும்பாலான தனியார் நிறுவனங்கள் ஊழியர்களுக்கு அடிப்படை அல்லது ஓரளவு சம்பளத்தை மட்டுமே வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 25 இற்கும் அதிகமான ஆசிரியர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பு

## வெளியான அதிர்ச்சித் தகவல்

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளான 25 இற்கும் அதிகமான ஆசிரியர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர் என பொது கல்வி சேவை சங்கத்தின் தலைவர் வசந்தா ஹந்தபஹான்கொட தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த அனைத்து ஆசிரியர்களும், அண்மையில் நடைபெற்ற அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாட்டு ஆர்ப்பாட்ட பேரணிகளில் கலந்து கொண்டவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுவரெலியா, வலபனை, ஆணமடு, சிலாபம், அநுராதபுரம், புத்தளம் மற்றும் அம்பாறை ஆகிய கல்வி வலயங்களை சேர்ந்த ஆசிரியர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட 400 இற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு இதுவரை கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

அதிபர்-ஆசிரியர் ஆர்ப்பாட்டம் காரணமாக லட்சக்கணக்கான மாணவர்களுக்கு இணைய வழிக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என பொது கல்வி சேவை சங்கத்தின் தலைவர் வசந்தா ஹந்தபஹான்கொட குறிப்பிடுகின்றார்.

அண்மைக் காலமாக நாட்டிலுள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் - அதிபர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடனுக்கு எரிபொருளை வாங்க முயற்சி இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் பேச்சு

ஆறு மாத கடன் அடிப்படையில் முக்கிய நாடுகளிடம் இருந்து எரிபொருளைப் பெறுவதற்கான பேச்சுகள் நடைபெற்று வருகின்றன என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். ஈரான், இந்தியா மற்றும் சீனாவின் தூதர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.


இதுவரை நடைபெற்ற கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக அமைந்துள்ளன எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உலக சந்தையில் எரிபொருளின் விலை சிறிது சிறிதாக உயர்ந்து வருவதாக இருந்தாலும், எரிபொருள் விலை நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் அளவுக்கு கீழே வரவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறல் 718 பேர் கைதாகியுள்ளனர்

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 718 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேற்படி குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 61 ஆயிரம் நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தை விட்டு வெளியேறும் மற்றும் உள்நுழையும் பகுதிகளில் நேற்றைய தினம் 1,258 வாகனங்களில் பயணித்த 2 ஆயிரத்து 82 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

# வவுனியாவில் மரக்கறி வியாபாரிகள் இருவருக்குக் கொவிட் தொற்றுறுதி!





ஊரடங்கு சட்ட நேரத்தில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து, அவர்களுடன் தொடர்புடையவர்களை பரிசோதனை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

ஊரடங்கு சட்ட நேரத்தில் கிராமங்களுக்குச் சென்று மரக்கறி விற்பனை செய்யாது வவுனியா நகரப் பகுதியில் கடைகளைத் திறந்தும், வாகனங்களை தொடர்ச்சியாக நிறுத்திவைத்தும் மக்களை வரவைத்து வியாபாரத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன்போது மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட 10 பேர் வரை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அழைத்து செல்லப்பட்டு அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அதில் வவுனியா, இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள தண்ணீர் கடையின் அருக்கில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சுகாதாரப் பிரிவினர் சென்று மரக்கறி வியாபாரிகளை அகற்றும் வரை மக்கள் பலரும் வருகை தந்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்திருந்தனர். இந்நிலையில் மேற்படி இருவருக்கும் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் மரக்கறி விற்பனை நிலையத்துக்குச் சென்று மரக்கறிகளை கொள்வனவு செய்தோர் சமூகப் பொறுப்புடனும், தமது பாதுகாப்புக் கருதியும் உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வருகை தந்து அன்டிஜன் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உறுதியான முடிவுக்கு இடமில்லை

**கொரோனாத் தொற்றினால் தினசரி உயிரிழப்போர் எண்ணிக்கை இருநூறைத் தாண்டிவிட்டது.**

**தொற்றுப் பரிசோதனைகளை அரசு கணிசமான எண்ணிக்கையால் குறைத்துள்ள போதிலும் தினசரி அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை நான்காயிரத்து ஐந்நூறு என்ற எல்லையைத் தொட்டுவிட்டது. சோதனைச் செயற்பாடுகளைக் கூட்டினால் அது ஓரிரு தினங்களில் ஐயாயிரத்தை எட்டும் என்பது உறுதி.**

**மூன்று மாத காலத்தில் மொத்த உயிரிழப்பு பத்தாயிரத்தைத் தாண்டும் என்ற எதிர்வு கூறல் மறுக்கற்பாலதல்ல என்பதும் தெளிவு.**

**கொரோனாவின் திரிவான டெல்டா விகாரத்தின் வீரியத்துக்கு முன்னால் மனித குலம் மண்டியிடுவது தவிர்க்க முடியாததோ என்று சிந்திக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**இந்த வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் மருத்துவ – சுகாதார ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவது வேதனைக்குரியது.**

**கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் டாக்டர்கள், தாதியர்கள், ஏனைய மருத்துவ ஊழியர்கள் என நானூறு பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தெற்கின் மற்றொரு போதனா ஆஸ்பத்திரியான காரப்பிட்டிய வைத்தியசாலையில் மட்டும் ஒன்பது மருத்துவர்கள் உட்பட 112 சுகாதார ஊழியர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் ஏழு வைத்தியர்கள், இருபது தாதியர்கள், ஏழு கனிஷ்ட நிலை உத்தியோகத்தர்கள் கொரோனா சிகிச்சை பெறும் நிலையில் உள்ளனர். இதேபோன்ற மோசமான கட்டத்தில் பல அரச வைத்தியசாலைகள் தள்ளாடுகின்றன.**

**இப்போது தொற்றுப் பரவும் வேகத்தைப் பார்க்கும் போது நாளை மறுதினம் செப்ரெம்பர் பிறந்து, அதன் நடுப்பகுதியில் தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை ஆறாயிரம் முதல் பத்தாயிரம் வரையாக இருக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கின்றது.**

**தற்போதைய அரசு அறிவித்த பொதுமுடக்கம் பயனற்றது என அந்த அமைப்பு விசனம் தெரிவிக்கின்றது.**

**2020 மார்ச்சில் அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் பயனுள்ளதாக முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் கடந்த மேயில் அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் சரியாகப் பேணப்படவேயில்லை. இப்போது செய்யப்பட்டிருக்கும் மூன்றாவது பொது முடக்கம் வெறுமனே பெயரளவில் செய்யப்பட்ட ஒன்று. அதை நடைமுறைப்படுத்துவதில் அரசு சிரத்தையே எடுக்கவில்லை. இதனால் பலனேதும் விளையப்போவதில்லை. மாறாக, மோசமான விளைவுகளே ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹன்ஸ்மல் வீரசூரிய தெரிவித்திருக்கின்றார்.**

**பொது முடக்க அறிவிப்பை எண்பது முதல் தொன்னூறு வீதம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தி, எழுமாற்றாக தொற்றுச் சோதனையையும் தீவிரப்படுத்தினால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்று அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார்.**

**ஆனால் இரண்டு விடயங்களிலுமே – பொது முடக்கத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தல் மற்றும் தொற்றுப் பரிசோதனையைத் தீவிரப்படுத்தல் ஆகிய இரண்டிலுமே – அரசின் போக்குத் தலை கீழாக, மெத்தனமாக இருக்கின்றமைதான் விசனத்துக்குரிய விடயமாகும்.**

**அரசின் இந்தப் பொறுப்பற்ற அணுகுமுறையால் நாட்டின் இரண்டு வளங்களுமே பெரும் பின்னடைவில் – ஆபத்தில் – மூழ்கியிருக்கின்றமை முக்கிய விடயமாகும்.**

**நாட்டின் பொருளாதார மூலவளமும் சிதிலமடைந்து விட்டது. மனித வளமும் பெரும் சிக்கலுக்குள் மூழ்கியுள்ளது.**

**இந்த இக்கட்டிலிருந்து நாட்டை மீட்பது என்றால் திட்டவட்டமான – உறுதியான – நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்க வேண்டும்.**

**தடுமாற்றத்திலும், குழப்பத்திலும், மூழ்கிக்கிடக்கும் அரசுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் தீர்க்கமான – தீர்க்கதரிசனமாக – பார்வை இல்லை. அதனால் அது, நழுவல், வழுவல் முடிவுகளைத்தான் எடுக்கும். அதனால் கொரோனாத் தொற்றுச் சவாலை உறுதியுடன் முகம் கொள்ள முடியாது என்பதுதான் யதார்த்த உண்மை.**

## கொரோனா உடலங்களை எரியூட்ட வவுனியாவில் வரிசையில் காத்திருப்பு

### நகரசபைத் தலைவர் கௌதமன் தகவல்





வவுனியா நகரசபைக்குச் சொந்தமான பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் மயானத்தில் கொவிட் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை எரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக நகரசபை தலைவர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் கொவிட் தொற்றால் இறப்பவர்கள் மட்டுமன்றி மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங்களில் கொவிட்டினால் உயிரிழப்பவர்களின் உடல்கள் வவுனியா பூந்தோட்டம் இலத்திரனியல் மயானத்திலேயே தகனம் செய்யப்படுகின்றன.

தற்போது கொவிட் இறப்புகள் அதிகரித்துள்ள நிலையில் இறந்த உடல்களை எரிப்பதற்கு நேரம் தேவைப்படுவதனாலும், ஓர் உடலை எரித்து இரண்டாவது உடலை எரிப்பதற்கு குறிப்பிட நேர இடைவேளை வழங்க வேண்டி இருப்பதாலும், உடல்களை எரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உடல்களை எரியூட்டுவதற்காக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) மன்னாரிலிருந்து 5 உடல்கள் பூந்தோட்டம் இலத்திரனியல் மயானத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. வவுனியாவில் இருந்தும் 7 உடல்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

இதன்போது நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது. நகரசபை ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த உடல்களை எரியூட்டுவதற்காக மிகக் கடுமையாக வேலை செய்து வருகின்றனர். இந்த நெருக்கடியான காலத்தில் தம்மால் இயன்றளவு உடல்களை எரியூட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அனைவருக்குமான சேவையை வழங்கி வருகின்றோம்.

தொடர்ந்தும் அதிகளவான மரணங்கள் வவுனியாவிலும் நிகழ்ந்து வரும் நிலையில் வவுனியா மக்கள் அவதானமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தடுப்பூசிகளின் செயல்திறன்; நடக்கின்றது ஆராய்ச்சி

### தரவுகள் விரைவில் அதிகாரிகளுக்கு

இலங்கையில் கொவிட்டின் புதிய மாறுபாடுகளுக்கு எதிராக, தற்போது பயன்படுத்தப்படும் கொவிட் தடுப்பூசிகளின் செயல்திறன் தொடர்பான தரவுகள் தொடர்புடைய அதிகாரிகளுக்கு விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தடுப்பூசிகளின் செயல்திறன் தொடர்பில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

இந்த நிலையில் அது தொடர்பான தரவுகள் சுமார் ஒரு மாதத்தில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், கொவிட் வகைகளின் ஆராய்ச்சியை விரிவுபடுத்துமாறு, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவை வலியுறுத்தியுள்ளது.

கொவிட்டின் புதிய மாறுபாடுகள் தொடர்பில், தற்போதைய தடுப்பூசிகளின் செயல்திறன் தொடர்பாகக் கரிசனை இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் நவீன் டி சொய்சா கூறியுள்ளார்.

தற்போதைய தடுப்பூசிகள், ஆரம்பத்தில் உருவான கொவிட் வைரஸிற்காக உருவாக்கப்பட்டவையாகும்.

எனவே, தற்போதைய மாறுபாடுகளுக்கு எதிராக, இந்த தடுப்பூசிகளின் செயல்திறனை அறிந்து கொள்ள, அறிவியல் மற்றும் பல பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆய்வு விடயத்தில், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை மட்டும் சார்ந்து இருக்காமல், சுகாதார அமைச்சின் கீழ் சோதனை நடத்த வேண்டும் என்றும் நவீன் டி சொய்ஸா வலியுறுத்தியுள்ளார்.

சுகாதார அமைச்சின் கீழ் பல நிபுணர்கள் பணிபுரிகின்றனர், எனவே அவர்களின் நிபுணத்துவத்தை சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பஹ்ரைனில் நடத்தப்பட்ட புதிய ஆராய்ச்சி, உலகெங்கிலும் புதிய சார்ஸ் - கொவிட் - 2, வகைகளின் தோற்றம், ஆரம்பத்தில் சீனா - வுஹான் மாறுபாட்டுக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட, தற்போதைய தடுப்பூசிகளின் செயல்திறனைப் பற்றிய கவலையை எழுப்பியுள்ளது.

பஹ்ரைனில் நடத்தப்பட்ட ஆய்வில், அஸ்ட்ராஜெனெகா, பைஸர், பயோஎன்டெக், சினோபோர்ம் மற்றும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளின் ஒட்டுமொத்த செயல்திறன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொடர்பான மருத்துவமனையில் சேர்க்கும் அபாயத்தை குறைக்கிறது. எனினும் தீவிர சிகிச்சை பிரிவு சேர்க்கை மற்றும் இறப்புகளுடன் ஒப்பிடும்போது சினோபோர்ம் தடுப்பூசி பெறுபவர்களிடையே கொவிட் தொற்றில் அதிக ஆபத்து இருப்பதைக் காட்டுகிறது.

இதற்கிடையில், தடுப்பூசிகளால் பாதுகாப்பு குறைந்து வருவதாக புதிய தரவு காண்பிப்பதால், அடுத்த மாதம் கொவிட் பூஸ்டர் தடுப்பூசிகளை விநியோகிக்க அமெரிக்கா தயாராகி வருகிறது. டெல்டா வகையின் ஆதிக்கத்துடன், தடுப்பூசியின் ஆரம்ப 2 அளவுக்கு பின்னர் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்குகிறது என்பது இப்போது மிகவும் தெளிவாகியுள்ளது என்று அமெரிக்காவில் உள்ள சுகாதார நிபுணர்கள் கூறியுள்ளனர்.

மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை இலங்கையும் ஆய்வு செய்து வருகிறது. எனினும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

## கௌரிசங்கரி தவராசா மறைவுக்கு சுவிட்ஸர்லாந்து தூதரகம் அறிக்கை

இலங்கையில் மரணித்த பிரபல தமிழ் பெண் சட்டத்தரணியான கௌரிசங்கரி தவராசா தொடர்பில் சுவிட்ஸர்லாந்து தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவர் காலமாகியுள்ள நிலையில் இதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில்–

தவராசா அவர்களுக்கு, தங்கள் மனைவி கௌரிசங்கரி தவராசாவின் மரணத்தால் நாம் துயரக்கடலில் ஆழ்ந்தோம்.

சோதனை மிகுந்த வேளைகளில் கூட எவ்விதப் பயமுமின்றி மிகுந்த துணிவுடன் போராடிய ஓர் ஒப்பற்ற திறமைசாலியான சட்டத்தரணியை நாம் இழந்து விட்டோம்.

அவரது பாராபட்சமற்ற சேவையின் விசேட அம்சமாக இருந்தது மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய இலவச சேவை.

சமுதாயத்தின் அடிக்கோட்டில் இருந்த மக்களுக்காகவும், அவர்களது மனித உரிமைகளுக்காகவும் மனித சமுதாயத்திற்காகவும் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

அவரது பிரிவு சட்டத்துறைக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாகும். தயவு செய்து எங்கள் அனுதாபச் செய்தியை ஏற்றுக் கொள்ளவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு**

**அங்கம் -60**

**ந.வித்தியாதரன்**


தலைவர் பிரபாகரன் தந்த விருந்து. அருகில் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்.

என் பத்திரிகை குரு ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவின் நினைவுகள் பற்றிய கட்டுரை தொடர்தான் இது. அவர் என்னை முப்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் வழி நடத்தி, ஆலோசனை தந்த விடயம் எப்படி என் வாழ்வில் பேருதவியாக வந்து அமைந்தது என்பதை விவரித்து வருகிறேன். அதனிடையே அந்தக் காலகட்டத்தில் கட்டவிழ்ந்த பிற விடயங்களையும் இங்கு சொல்லிச் செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. அவை சிவநாயகம் ஐயாவுடன் நேரடியாகத் தொடர்புபட்டவை அல்லாமல் இருக்கின்ற போதும்.

1985இல் நாம் யாழ்ப்பாணத்தில் உதயனை ஆரம்பித்தபோது அங்கு ஏலவே இரு தினசரிகள் வந்துகொண்டிருந்தன. ஒன்று – ஈழநாடு; மற்றது – ஈழமுரசு.

ஈழமுரசு பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் காணி அதிகாரியாக இருந்த மயில் அமிர்தலிங்கம் என்பவர் நடத்தி வந்தார். அவர் 'தமிழர் நிதியம்' என்ற நிதி நிறுவனத்தையும் இயக்கினார். மூன்றாவது பத்திரிகையாக நாம் உதயன் தினசரியை வெளிக்கொணர்ந்து ஆறு,ஏழு மாதங்களில் ஈழமுரசு தினசரியின் நிர்வாகத்தில் சில முரண்பாடுகள் ஏற்பட்டன. அதன் ஆசிரியராக இருந்த மூத்த பத்திரிகையாளர் எஸ்.திருச்செல்வம் ஒரு குழுவினருடன் அந்த பத்திரிகையில் இருந்து வெளியேறினார். சிவராஜா என்ற தொழில் முயற்சியாளருடன் இணைந்து நான்காவது பத்திரிகையான முரசொலியை ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் இந்த நான்கு தினசரிகளும் வெளிவந்து கொண்டிருந்த சமயத்தில்தான் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இராணுவத் தளபதியாக யாழ்ப்பாணத்தில் இருந்த இளைஞர் டக்ளஸ் தேவானந்தா அந்த நடவடிக்கையை எடுத்தார். அதை விவரிக்க முன்னர் ஒரு ஒரு குறிப்பை பார்ப்போம்.


என் பத்திரிகை வழிகாட்டிகள் மூவரில் இருவர். எஸ்.டி.சிவநாயகம் ஐயாவும் கே.கே.இரத்தினசிங்கமும்.

1987 வரை யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு தினசரிகள் என்ற நிலைமை நீடித்தது. யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படைகள் காலடி எடுத்து வைத்த போதும் அதுதான் நிலைமை. ஆனால் அதற்கிடையில் ஒரு மாற்றம் நிகழ்ந்திருந்தது. யாழ்குடாநாட்டில் மற்றைய இயக்கங்களைத் தடை செய்த புலிகள் அதன் பின்னர் ஊடகங்கள் பக்கம் தலையை நீட்டினார்கள். புலிகளின் தலைமையுடன் எமக்கிருந்த தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்தும் எங்களது தந்திரோபாய அணுகுமுறைகளின் மூலமும் அந்தச் சிக்கல்களுக்கு முகம் கொடுத்துச் சமாளித்தோம்.

ஈழமுரசு பத்திரிகையை அதை நிர்வாகத்திடம் இருந்து பலவந்தமாகப் பிடுங்கி தங்களுடையது ஆக்கினார்கள்புலிகள். அவர்களின் நாளிதழாக ஈழமுரசு வெளிவர, உதயன், ஈழநாடு, முரசொலி ஆகியன சுயாதீன நாளிதழ்களாக வெளிவந்தன. அப்போதுதான் இந்திய அமைதிப்படை காலடி எடுத்து வைத்தது. புலிகள் – இந்தியப் படை மோதல் வெடித்தது. இந்தியப் படையின் முதல் இராணுவ நடவடிக்கை ஈழமுரசு, முரசொலி பத்திரிகைகளைக் குண்டு வைத்துத் தகர்த்ததுதான். தப்பிப் பிழைத்த உதயனும் ஈழநாடும் தொடர்ந்து வெளிவந்தன. எனினும் இந்தியப் படையின் முற்றுகைக்குள் இருந்த சமயம் உள்ளே புகுந்த புலிகள், ஈழநாட்டைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். அதனால் சில காலம் யாழ்ப்பாணத்தில் உதயன் தனித்து வெளியாகும் சூழல் நீடித்தது.

இந்தியப் படையின் காலத்தில் ஊடகங்கள் மீது இடம்பெற்ற அராஜகங்கள் தனித்து தொடராக எழுதப்பட வேண்டியவை.

1990 முற்பகுதியில் இந்தியப் படை வெளியேறிய பின்னர் மீண்டும் உதயன், ஈழநாடு, முரசொலி வெளிவந்தன. ஈழமுரசு என்பது ஈழநாதம் என்ற பெயரில் முழுமையாகப் புலிகளின் பத்திரிகையாக – நாலாவது தினசரியாக – பிரசுரமானது. 1995 இல் யாழ் குடாநாட்டை இலங்கைப் படைகள் மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை இது நீடித்தது.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

எண்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து பல்வேறு இயக்கங்களின் செல்வாக்கு குடாநாட்டில் ஆரம்பித்த காலம் முதல் – 1995 இல் யாழ்குடாநாடு படைகளின் கட்டுப்பாட்டில் மீண்டும் விழும் வரையான காலப்பகுதியில் குடாநாட்டிலிருந்து வெளியான பத்திரிகைகளை வரிசைப்படுத்திப் பாருங்கள். ஈழநாடு, ஈழமுரசு, உதயன், முரசொலி ஈழநாதம் – இவை தினசரிகள்.

திசை, சட்டர்டே ரிவியூ– ஆகியவை வார வெளியீடுகள்.

இந்தப் பத்திரிகைகள் என்னவாயின?

ஈழநாதம் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. அதை அவர்களே வன்னிக்குக் கொண்டு சென்றார்கள். 2009 மேயில் புலிகள் இயக்கத்துடன் அது முடிவுக்கு வந்தது.

மற்றப் பத்திரிகைகள் என்னவாயின? ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, சட்டர் டே ரிவியூ, திசை எல்லாமே புலிகளால் முழுமையாகச் சுவீகரிக்கப்பட்டு, கபளீகரம் செய்யப்பட்டு, புலிகளோடு வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காணாமல் போயின. அதுவும் ஈழமுரசு பத்திரிகையைத் தொடங்கிய மயில் அமிர்தலிங்கம் ஒரு நிதி நிறுவனத்தையும் நடத்தினார். அதனைக் காட்டியே அந்தப் பத்திரிகையைப் பறித்து எடுத்தனர் புலிகள். பின்னாளில் அவரைப் புலிகளே சுட்டுக் கொன்றனர் – அந்தப் பத்திரிக்கையைக் காட்டியே.

தப்பிப் பிழைத்த ஒரே ஒரு பத்திரிகை உதயன் மட்டும்தான். உதயனுடனும் ஒரு நிதி நிறுவனத்துக்கு தொடர்பு இருந்தது. அது பற்றிய குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் இன்றும் உள்ளன. மற்றைய அனைத்துப் பத்திரிகைகளையும் நிர்வாகத்துடன் அப்படியே சுவீகரித்துக் கபளீகரம் செய்த புலிகளுக்கு, அந்த நிதி நிறுவனச் சிக்கலையே காரணம் காட்டி உதயனை சுவீகரிப்பது என்பது ஜுஜுபி வேலை. உதயன் விடயத்தில் இரண்டு நடந்தது. அந்த நிதி நிறுவனத்தின் விவகாரத்தில் புலிகள் இறங்கவே இல்லை. உதயனை அழிக்கவும் முயலவில்லை. மாறாக, இலங்கைப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு மத்தியிலும் துணிச்சலாக அந்தப் பத்திரிகையைத் தொடர்ந்து தமிழர்களின் இனக் குரலாக நடத்தி வந்தமைக்காக அதன் ஆசிரியரான என்னை வன்னிக்கு அழைத்து தலைவர் பிரபாகரன், தனது கையால் சமைத்து, ஒரு விருந்தளித்து கௌரவித்தார். இந்த மதிப்பும் மரியாதையும் 2009 இல் புலிகள் இயக்கத்தின் முடிவு வரை தொடர்ந்தது நிஜம். இது தற்புகழ்ச்சிக்கான உரை அல்ல.

உதயனின் காவலர் என்று இன்று பலர் பட்டம் சூட்டி கொள்கின்றார்கள். மரணங்கள் மலிந்த பூமியில் மற்றைய எல்லாவற்றையுமே புலிகளே சுவீகரித்து விட்ட நிலையில், உதயன் மட்டும் தப்பிப் பிழைத்தமைக்கு யார் காரணம் அல்லது எது காரணம் என்று கேள்வி நியாயமாக கேட்கப்பட வேண்டிய ஒன்று. நிதி நிறுவனச் சிக்கலிலும் சிக்காமல், 2009 யுத்த முடிவு வரை தாக்குப்பிடித்து விட்டமையால், அதற்குப் பின்னரும் கொழும்பால் வந்த அழுத்தத்தையும் சமாளித்து எழுந்து விட்டமையால், கடந்தகால சரித்திரத்தை புரட்டிப் போட பலர் முயற்சிக்கின்றனர்.

உதயன் இந்த நீண்ட போரியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தாக்குப்பிடித்தமைக்கு யார் காரணம், உண்மை எது என்பதை வாசகர்களின் - விளக்கமாக கூறுவதாயின் வாக்காளர்களின் – மனச்சாட்சிக்கான தீர்மானத்துக்கே விட்டுவிடுகிறேன். வாசகர்கள் எல்லாம் அறிந்தவர்கள்.

தவறான கற்பிதங்களின் பின்னால், பிரச்சாரங்களின் பின்னால், மனச்சாட்சியைத் தள்ளிவைத்துவிட்டு, தமிழ் மக்கள் எடுபட்டுச் செல்கின்றார்கள் என்று சிவநாயகம் ஐயா நொந்து கொண்ட விடயம்தான் இன்றும் நடந்தேறியது. சிவநாயகம் ஐயா காலத்தில் தவறிழைத்த தலைவர்கள் வேறு. எனது காலத்தில் அந்தத் தவறுக்குப் பிரதான காரணம் சம்பந்தன் ஐயா, மாவை சேனாதிராஜா, சி.வீ.கே.சிவஞானம் போன்றோர். இதில் முதல் இருவரும் தங்களின் அரசியல் சுயலாபத்துக்காக, உதயனின் விடுதலைப் போராட்ட பங்களிப்பை பிழையான தரப்புக்கள் அரசியலாக மாற்றிக்கொள்ள துணை போய்த் தவறிழைத்தனர். அதற்கு உதவி சி.வீ.கே. சிவஞானம் தவறிழைத்தார் என்பேன்.

நானும் சேர்ந்து கால் நூற்றாண்டு காலம் உயிரைக்கொடுத்து கட்டியெழுப்பிய ஒரு ஊடக நிறுவனத்தை கெட்டுக் குட்டிச் சுவராக்கிய அரசியல் தலைவர்கள் பற்றிய ஆதங்கத்தின் வெளிப்பாடு இவை. அத்துடன் இவற்றை இக்கட்டுரைத் தொடரில் விட்டுவிடுகிறேன்.

ஊடகவியலாளர்களின் (என்னையும் சேர்த்து) கடும் கண்டனத்துக்கு விமர்சனத்துக்கும் பிற்காலத்தில் உள்ளானவர் டக்ளஸ் தேவானந்தா. அவர் யாழ் பத்திரிகைகளுக்கான பணி என்ற பெயரில் முன்னெடுத்த ஒரு நடவடிக்கை குறித்து எழுத முற்பட்ட நான், அதை விடுத்து சொந்தக்கதை சோகக்கதையில் இறங்கிவிட்டேன். டக்ளஸ் என்ற இளம் போராளித் தலைவர் மேற்கொண்ட அந்த நடவடிக்கை பற்றி நாளை விவரிக்கிறேன். கொஞ்சம் பொறுத்திருங்கள்.

(வளரும்...)


காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 14

## நேர்கோட்டுத்தள உருக்கள்


* மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்கோட்டுத் துண்டங்களினால் மூடப்பட்ட நேர்கோட்டுத் தளவுரு பல்கோணி எனப்படும்.




* பல்கோணி ஒன்றின் ஓர் அகக்கோணமேனும் பின்வளைகோணமாக அமை யாவிடின் அது குவிவுப்பல்கோணியாகும்.

* பல்கோணியொன்றில் ஒரு அகக்கோணமேனும் பின்வளைகோணமாக இருந்தால் அது குழிவுப்பல்கோணி ஆகும்.

* பல்கோணியின் எல்லாப் பக்கங்களும், எல்லா கோணங்களும் சமனாக இருப் பின் அப்பல்கோணி ஒழுங்கான பல்கோணியாகும்.



1) கீழே தரப்பட்டுள்ள தளவுருக்களை நன்கு அவதானித்து அட்டவணையை பூர்த்தி செய்க




| உரு | குவிவு/ குழிவு | ஒழுங்கானதா |
|---|---|---|
| a | | |
| b | | |
| c | | |
| d | | |
| e | | |
| f | | |
| g | | |


முக்கோணிகள்

- பக்கங்களின் அடிப்படையில்
  - சமபக்க முக்கோணி
  - இருசமபக்க முக்கோணி
  - சமனில்பக்க முக்கோணி
- கோணங்களின் அடிப்படையில்
  - கூர்ங்கோண முக்கோணி
  - செங்கோண முக்கோணி
  - விரிகோண முக்கோணி


2) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க

| முக்கோணியின் பக்க நீளங்கள் | | | முக்கோணியின் வகை |
|---|---|---|---|
| (cm) | (cm) | (cm) | |
| 7cm | 4cm | 9cm | |
| 8cm | 8cm | 8cm | |
| 6cm | 4cm | 9cm | |
| 5cm | 5cm | 5cm | |
| 7.5cm | 6.3cm | 7.5cm | |
| 3.5cm | 3.5cm | 3.5cm | |


3) பின்வரும் முக்கோணிகள் கூர்ங்கோண முக்கோணியா, செங்கோண முக்கோணியா அல்லது விரிகோண முக்கோணியா என எழுதுக





---------------------------------





---------------------------------




---------------------------------




---------------------------------




---------------------------------

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு 15

## சமன்பாடுகளும் சூத்திரங்களும் - விடைகள்

(01)
i) $x - 14 = 80$
ii) $5a - 3 = 98$
iii) $3y + 2 = 73$

(02)
3) $x = 16$
4) $x = 30$
5) $x = 8$
6) $x = 1$
7) $x = 5$

(03)
1) $3a = k$
2) $Lb = y$
3) $P = 2y + x$

ஆக்கம் : திரு. பா.லாவண்யா
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# எகிறும் விலைவாசி திருமாறும் மக்கள்

- ந.லோகதயாளன் -

நாட்டில் எந்தப் பொருளுக்கும் ஓர் நிரந்தர விலை இல்லை, தினசரி அது உயரும் என்பது நாட்டில் ஓர் திடமான ஆட்சி இல்லை என்பதன் வெளிப்படையான உண்மையாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

நாட்டினை ஆளும் தலைவரின் சகோதரர் நிதி அமைச்சரானால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும், ஏன் பாலும் தேனும் ஆறாக ஓடும் என்பன போன்ற மாயை உருவாக்கப்பட்டு அவசர அவசரமாக அவர் அமைச்சராக்கப்பட்டார். அதிலும் குறிப்பாக நிதி அமைச்சரானார்.

புதிய நிதியமைச்சர் பதவி ஏற்ற பின்பு நிகழ்ந்த சாதனையாகவோ அல்லது திருப்பமாகவோ எடுத்துக் கூறக்கூடிய விடயமாக பெருந்தொகைப் பணம் அச்சிடப்பட்டமையை மட்டுமே கூற முடியும். புதிய நிதியமைச்சராக பஸில் ராஜபக்ஷ பதவி ஏற்றமைக்காக நாட்டில் கொளுத்தப்பட்ட வெடிகளிற்கும் விநியோகிக்கப்பட்ட இனிப்புப் பண்டங்களிற்கும் செலவு செய்த பணத்திற்கான பெறுமதியைக் கூட பயனாகப் பெற முடியவில்லை என்பதனையறிந்த அரசு தலையைப் பிய்க்கின்றது.

நாட்டைப் பத்துத் தினங்களிற்கு மூடினால் ஆயிரத்து ஐந்நூறு கோடி ரூபா நட்டம் எனக் கூறுபவர்கள் இத்தனை மாதங்களாக திறந்திருந்தபோது கிட்டிய இலாபம் எங்கு எனக் கூற மறந்துவிட்டனர்.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் 10இற்கும் மேற்பட்ட பொருள்களிற்கு விலைக் கட்டுப்பாட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது. அந்த விலையை நாட்டு




மக்கள் வெளிவந்த வர்த்தமானியில் மட்டும் தான் கண்டனரே அன்றி எந்த வர்த்தக நிலையத்திலும் காண முடியவில்லை.

இவை அனைத்தையும் தாண்டி இந்த ஜனாதிபதி விட்டாரே ஒரு வர்த்தமானி அறிவித்தல், அது இலங்கையின் வரலாற்றில் இல்லாத வர்த்தமானியாகவும் காணப்பட்டது. அதாவது தேங்காயின் அளவைக் குறித்து அதற்கு ஒரு விலையும் போட, அதிகாரிகளோ நாய் பிடிகாரர் முன்பு கம்பியோடு திரிவது போன்ற வளையத்தோடு திரிந்து விற்பனைக்கு வைக்கப்படும் தேங்காயை அளந்தனர். ஆனால் இன்று அந்த விலைக்கு தேங்காயும் இல்லை, அதிக விலைக்கு விற்பதைப் பிடிக்கத் திரிந்த அதிகாரிகளையும் காணவில்லை.

நாட்டில் எரிவாயு வாங்குவதானால் அதிகாலை 5 மணிக்கு எழுந்து வெற்று சிலிண்டரோடு ஓடித் திரிந்து, நீண்ட வரிசையில் காத்திருந்தால் மட்டும் முதல் 100 இடத்தை பிடிப்பவர்களிற்கு காலை 8 மணிக்கு எரிவாயு கிடைக்கும், ஏனையோர் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பும் அவலமும் கூட நீடித்தது. சிறியவர்கள் முதல் பெரியோர் வரையில் பட்டினி கிடந்தாலும் ஒரு கப் தேநீர் அருந்த நாட்டில் போதிய பால் இன்மையால் அங்கரை நம்பி வாழ்ந்தவர்கள் இன்று அதற்காகப் பிச்சை எடுக்காத குறையாக கடை கடையாக ஏறி இறங்கும் அவலம் நிகழ்கின்றது.



380 ரூபா அங்கரை வேண்டச் சென்ற முதியவரிடம் 45 ரூபா யோக்கட் 6 வாங்கினால் ஒன்று எனக் கூற 680 ரூபாவிற்கு யோக்கட்டும் அங்கரும் வாங்கிச் சென்ற முதியவர், 3 பேரப் பிள்ளைகளிற்கும் அயல் வீட்டுப் பிள்ளைகளிற்கும் வழங்க, அயல்வீட்டுப் பிள்ளையின் தாயாரோ 'கொரோனா காலம் நாம் பிள்ளைக்கு குளிராக ஏதும் வழங்குவதில்லை. நீங்கள் ஏன் வழங்கினீர்கள்?' என முதியவருடன் நீண்ட சண்டையும் ஏற்பட்டது.

கடந்த மாதம் வரையில் 115 ரூபாவாக விற்பனை செய்த சீனி ஜெட் வேகத்தில் குருதி அமுக்கம் போன்று உயர்ந்து 240 ரூபாவில் வந்து நிற்கின்றது. கேட்க, பார்க்க,தடுக்க யாருமே இல்லை. 'அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழிதானே'. அதனால் வர்த்தகர்களைக் கேள்வி கேட்க முடியாத நிலைமையில் இந்த அரசு உள்ளது.

இதனால் சக்கரையும் 160ரூபாவில் இருந்து தற்போது 240 ரூபாவாகவும், மஞ்சள் பருப்பு 240 ரூபாவில் இருந்து 280 ரூபாவாகவும், பூடு 280ரூபாவில் இருந்து 360 ரூபாவாகவும் எகிறி விட்டன. விடிந்தால் என்ன பொருளிற்கு, எத்தனை ரூபா விலை ஏற்றப்படும் என வர்த்தகர்களும் மக்களும் ஏங்கித் தவிக்க, சிலரது காட்டில் மட்டும் நல்ல மழைவீழ்ச்சியாகவும் உள்ளது.

இவ்வாறான பொருள்களின் விலை அதிகரிப்பினால் ஏற்கனவே கடந்த ஆண்டு இல்லாமலாக்கப்பட்ட பொருள்கள் தொடர்பிலும் 6 ஆயிரம், 7 ஆயிரம் ரூபா ஆக்கப்பட்ட பொருள்கள் தொடர்பிலும் மக்களும் மறந்து விட்டனர்.

அதிக பெறுமதியான 5 ஆயிரம் ரூபாவிற்கு ஒரு நாணயம் வெளியிட்ட நாடு நமது தேசம்.

இன்னும் இவ்வாறான எத்தனை பெருமைகளை ஏற்படுத்துமோ என்ற தினக் கூலியாளர்களின் ஏக்கம் நாணயத்தாள்கள் அச்சடிப்பதற்கான உத்தரவுகளில் ஒப்பமிடுபவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

### திருநெல்வேலி வர்த்தகர் விசனம்

இந்த யுகம் 1970 களில் சிறிமாவோ பண்டாரநாயக்கா இறக்குமதிக்குத் தடை விதித்தபோது கால் இறாத்தல் பாணிற்கும் சீனிக்கும் வரிசையில் நின்ற யுகத்தினை விடவும்மோசமானது என 47 ஆண்டுகளாக வர்த்தக நிலையம் நடத்தும் - திருநெல்வேலியைச் சேர்ந்த - 71 வயது முதியவர் தெரிவிப்பதோடு அந்தக் காலத்தில் இறக்குமதி தடையால் விவசாயிகளேனும் நிம்மதியாக வாழ்ந்தனர், ஆனால் இந்தக் காலத்தில் பணத்தை பெட்டியில் வைத்திருப்பவர்கள் மட்டும் மேலும் பெட்டிகளை அதிகரிக்க முடியும் என்றார்.

### வர்த்தக சங்கத்தின் தலைவர் கருத்து

நாட்டில் இவ்வாறு அத்தியாவசியப் பொருள்கள் திடமற்ற விலையிலும் பற்றாக்குறையாகவும் காணப்படுவது தொடர்பில் யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தின் தலைவரான இ.ஜெயசேகரத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது -

இலங்கையில் இன்று பொருள் என்ன விலை எனத் தினக்கூலி மக்கள் ஏங்கும் நிலைமை தாண்டி, எந்த விலைக்கேனும் பொருள் கிடைக்குமா என்ற நிலைமை உருவாகி வருகின்றது. ஏற்கனவே பல நூறு பொருள்களிற்கு தடை.கட்டுமானப் பொருள்கள் உட்படப் பல எத்தனை மடங்கு அதிகரித்து விட்டன என எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இதேநேரம் இன்று கொழும்பில் சீனியின் விலை 210 ரூபாவாக உள்ள போதும் யாழ்ப்பாணத்தில் 190 ரூபாவிற்கு எடுக்க கூடியதாகவுள்ளது. கை இருப்பு இருந்தமையினால். நாளை என்ன நிலைமையோ தெரியாது.

அங்கர் பால் மாவின் விலையானது டொலரின் பெறுமதி நாட்டில் 180 ரூபாவாக இருந்தபோது தீர்மானிக்கப்பட்ட விலையெனவும் தற்போதைய டொலரின் பெறுமதிக்கு இறக்குமதி செய்து அதே விலையில் விற்பனை செய்ய முடியாது என அந்த நிறுவனம் கூறும் காரணமும் நியாயமாகவுள்ளதனால் அவர்கள் தமது இறக்குமதியை மட்டுப்படுத்தியுள்ளனர் என்கின்றார்.

### இரணைமடு விவசாயி பெருமிதம்

இந்த நாட்டில் உற்பத்தியான நாட்டரிசி 2020ஆம் ஆண்டும் 125 ரூபாவிற்கே விற்பனை செய்யப்பட்ட நிலையில் இன்றும் அதே 125 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது என்றால் அது எமது உற்பத்தியினதும் உற்பத்தியாளர்களினதும் முயற்சி என்பதனை ஏற்று, நாட்டின் தரிசு நிலங்கள் அனைத்தையும் பயன்படுத்தி, என்ன உற்பத்தியை செய்ய முடியுமோ அவற்றை மேற்கொள்வதோடு அதிக கால் நடை வளர்ப்பிலும் ஈடுபடுவதே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கான வழியாக அமையும். - என இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் தெரிவிக்கின்றார்.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப்படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 115

**325. ஏன்? இவை தமிழ் மக்களின் வினை என்கிறீர்களா?**

மிக சுருக்கமாகச் சொன்னால் அதுவும் முக்கிய காரணம்தான். நாம் பிறந்த பெற்றோர், நமது சுற்றம், நமது சமூகத்தின் பழக்கவழக்கங்கள் என்பன எல்லாமே எமது வாழ்வை எப்படி நியமிக்கின்றனவோ, கட்டுப்படவும் வைக்கின்றனவோ, அதேபோல் நாம் பிறந்த தமிழீழமும் – தமிழ் மக்கள் அபிலாஷை கொண்ட தமிழீழமும் – இந்தியக் கடற்பரப்பில் இந்திய ஆளுமையில்தான் இருந்தது. அதை இந்தியாவை எதிர்த்து அல்லது தவிர்த்து இன்னுமொரு நாட்டுடனோ – அது அமெரிக்காவானாலும் அன்றில் சர்வதேசத்துடனோ – இணைந்து அதை அடைந்து விடலாம் என நினைத்து செயல்பட்டமை முட்டாள் தனம். எமது வினை. இந்தியாவின் துணையோடும் சர்வதேசத்தின் ஆதரவோடு தான் எமது அபிலாஷைகள் நிறைவேறும் என்பதை இந்த வரலாறுகள் சொல்லுகின்றன. ஸ்ரீலங்காவின் இராணுவத்தை விட வலிமையான இராணுவக் கட்டுப்பாட்டை உருவாக்கி விட்டால் தமிழீழம் அமைத்து விடலாம் என்பது பிரபாகரனின் நம்பிக்கை. அதை அடிப்படையாக வைத்தே அவர் செயல்பட்டார். அது தான் முக்கியம் என்று புலம்பெயர் ஆதரவாளர்கள் அள்ளி அள்ளிக் கொடுத்தார்கள்.

ஆயுதமேந்தி. அளவற்ற தியாக உணர்வுடன், விடுதலைப்புலிகள் நடத்திய வீரம் விளைந்த போரினால் எந்த உரிமையை புதிதாகத் தமிழ் மக்களால் பெற முடிந்தது? அப்படியும் புலம்பெயர்ந்து வாழும் சிலர் விடுதலைப் புலிகளின் ஆயுத இயக்கம் இனியும் தொடர வேண்டும் என்று ஓயாமல் குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் வினையில் விளைக்க முயலாமல் நடந்து முடிந்த நிகழ்வுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அப்படி புலம்பெயர்ந்தவர்களால் போருக்கு முன்னர் கொடிபிடித்தவர்களும் உண்ணாவிரதமிருந்தவர்களும் சுகமான இடங்களிலிருந்து மேடை போட்டு கண்ணீர் விட்டமையும், கவிதை எழுதி வாசித்தமையும் போர் முரசு கொட்டியமையும், அவற்றைப் பறை சாற்றியதும்தான் மிச்சம். வெறும் வாய் வேதாந்த உணர்ச்சிகள் தான்.

போர் வலயத்தில் இருந்து அழுது ஒப்பாரி வைத்த மக்களில் இவர்கள் ஒருவரும் இல்லை. பின்னர் 'மானிக் பாம்' போன்ற பண்ணை முகாம்களில் அடைபட்டுக் கிடந்து, சித்திரைவதைப்பட்டு வெளியேறி, அந்த முகாம்களின் அயல்களிலோ அல்லது ஒரு வாழ்வாதாரமும் இன்றி இறக்கிவிடப்பட்ட கிராமங்களிலோ உயிர்வதையுடன் வாழ்வுக்காக பிச்சை எடுப்பவர்களிலும் இவர்களில் ஒருவருமில்லை. களத்தில் நின்று சாவை சந்திப்பது வேறு, பரணி பாடுவது வேறு. அமெரிக்காவில் அரங்கேறிய இரட்டை கோபுரத்தாக்குதலும், அதைத்தொடர்ந்து அமெரிக்காவின் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பதும் ஸ்ரீலங்காவுக்கு வசதியாக வந்தது. இன ஒடுக்கலுக்கான எழுச்சியை அது ஆயுதம் தாங்கினால் பயங்கரவாதமாகப் பார்க்கப்படும் என்ற பொதுவான மனப்போக்கின் மாற்றத்தைக் கணிக்காது போரிலே நம்பிக்கை வைத்தமை பிரபாகரனின் பிழை. ஆனால் அவரை சுற்றியிருந்த புத்திஜீவிகள் கூட, அந்த மாற்றங்களை கணக்கெடுக்காமல், புத்தி கூறாமல், தமது இருப்பிற்காக ஒத்து ஊதியதும், இந்தியாவை ஈடுபடுத்த வேண்டியதில்லை என்ற வன்மத்தில் காரியங்களை நடத்தியதும், சிங்களவருக்கு பின்னால் சீனாவும், பாகிஸ்தானும், இஸ்ரேலும், ரஷ்யாவும், ஈரானும் – ஏன் அமெரிக்காவும் இந்தியாவும் கூட – நிற்க, சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளின் அழிவை அது அவ்வளவு இலகுவில் நடக்கும் என எதிர்பார்க்காவிட்டாலும், நடந்ததை இன்று தலிபான் எவ்வளவு சுலபத்தில் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியதை பார்க்கிறதோ அப்படிக் கைகட்டி நின்று பார்த்தது.

அங்கு தான் ஸ்ரீலங்காவின் வெற்றிச் செயலுக்கான சாணக்கியமும் வீரம் விளைவித்த விடுதலைப் புலிகளின் தோல்வியும் ஒரு மையப் புள்ளியில் சந்தித்தன. அது ஏன் என்பதை உண்மைகள் பொதிந்த ஒரு உவமானத்தால் பார்க்கலாம்.

**326. அது என்ன உவமானம்?**

சரித்திரம் சீன மக்கள் தாம், போரில்லாத ஒரு நிம்மதியில் இருப்பதற்காக சீனப் பெரும் சுவரைக் கட்டி எழுப்பினார்கள் என சொல்கிறது. யாரும் அந்த உயரத்தை ஏறிக் கடந்தோ அல்லது அதன் கட்டுமானத்தை உடைத்தோ உள்புகுந்து தாக்க முடியாது என்ற நம்பிக்கை. அவர்கள் அந்த பெருஞ் சுவரை எழுப்பிய 100 வருடங்களுக்குள் சீனா மூன்று முறை படையெடுப்புக்கு ஆளாகி தாக்கப்பட்டார்கள். அந்த மூன்று முறைகளும் எதிர்ப்படையின் போர் வீரர்கள் மதிலை ஏறியோ அன்றில் உடைத்தோ உள்வரவில்லை. ஒவ்வொரு முறையும் அவர்கள் வாசல்களில் காவலுக்கு வைக்கப்பட்ட காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்தே கதவுகளால் உள்சென்றார்கள்.



ஜேர்மன் பெருஞ்சுவர்

சீனா பெரும் சுவரை கட்டி எழுப்பினாலும், காவலுக்கு நியமிக்கப்பட்ட காவலர்களின் குணம், ஒழுக்க சீலம் பற்றி கணக்கெடுக்கவில்லை. அவர்களது பெரும் சுவர் அவர்களது பலத்துக்கும் பெருமைக்கும் சான்றாக இருந்தாலும் மனித குணாதிசயங்களையும் ஒழுக்க சீலங்களை பற்றியும் அவர்கள் சிந்திக்க வைத்தது.

ஆகவே அவர்கள் மத்தியில் தங்களது எதிரிக்கு எதிரான பலமான தடுப்பு பலம் வாய்ந்த மதிலல்ல, பலப்படுத்தப்பட்ட குணமும் ஒழுக்க சீலமும் என உணர்ந்தார்கள். அதனை முதலில் மற்ற எதையும் கட்டி எழுப்புமுன் செய்ய வேண்டும் என்று படித்துக் கொண்டார்கள்.

இதைத்தான் பின்னாளில் சேக்ஸிபியர் எங்களது பிழை எமது ஜாதகங்களில்லை, எங்களிலேயே இருக்கிறது என்றார். ஆகவே தான் பல பெரிய நிறுவனங்களில், முதலாவது குணத்தையும் ஒழுக்க சீலத்தையும் வேலைக்கு தெரிவு செய், பின் அவர்களுக்கு வித்தைகளைப் பழக்கு என்று படிப்பிப்பார்கள்.

இரண்டாம் மகா யுத்தத்தின் பின் ஜேர்மனிகளை ஒரு பெரிய சுவர் பிரித்தது. மேற்கு ஜேர்மனி அமெரிக்க ஆதரவில் வசதியாக வாழ்ந்தாலும் கிழக்கு ஜேர்மனி ரஷ்யாவின் கைபொம்மையாக கஷ்டத்தில் இருந்தது. அவர்களுக்கு தமது வாழ்க்கைத் தரங்களினால் மேற்கு ஜேர்மனியர் மேல் ஒரு காழ்புணர்வு இருந்தது. ஆதலால் ஒரு சமயம் கிழக்கு ஜேர்மனியின் சில இளைஞர்கள் டிரக் ஒன்றில் குப்பை கூளங்களை ஏற்றி மேற்கு ஜேர்மனியின் பக்கத்தில் வைத்தார்கள். மேற்கு ஜேர்மனியர் அதையே செய்திருக்கலாம். ஆனால் அவர்களோ, இன்னுமொரு டிரக்கில் பாண், பால், பதப்படுத்த உணவுகளை நிரப்பி, கிழக்கு ஜேர்மனி பக்கம் வைத்து, அதற்கு மேல் "ஒருவன் தன்னிடமிருப்பதைத்தான் தருவான்" என எழுதியும் வைத்தார்கள். ஆக ஒருவன் தன்னிடம் உள்ளதை தான் தரலாம். அன்பா, வெறுப்பா? வன்முறையா, சமாதானமா? ஒன்றை உருவாக்கும் தகைமையா அல்லது அதனை அழிக்கும் தகைமையா? தமிழ் மக்கள் தங்களது விடுதலைப் போராட்டத்தால் கற்றுக் கொண்ட அல்லது அதற்குக் கொடுத்த குணாதிசயங்கள் என்ன? ஒற்றுமையாக ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தன்மையா? அல்லது கட்டப்படுகின்ற கட்டுமானங்களையே எங்களது குணாதிசயங்களால், உடைத்தெறிந்ததா?

'நாங்கள் எங்களுக்குள்ளேயே இவற்றை ஆராய வேண்டும். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு." பல கொக்குகள் ஒன்று சேர்ந்து மீன் வலையையே கொண்டு பறந்தன என்ற ஒற்றுமைக்கான கதைகளெல்லாம் படிப்பித்தவர்கள் தமிழ் மக்கள்.

ஒன்றை, ஒரு தமிழீழத்தை கட்டியெழுப்ப வட்டுக் கோட்டையில் தீர்மானம் எடுத்த பின், அந்தக் கட்டுமானங்களையெல்லாம் உடைத்தெறிய வழிகள் வகுத்தது, எங்கள் குணாதிசயமான ஒற்றுமையீனமும் ஒருவரை ஒருவர் தன்னிச்சைக்காக இழுத்து வீழ்த்துவதும் சீன மக்கள் போல், தங்களுக்குள்ளே தங்களை ஆராயாமல், அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சொன்னது போல் "நீ என்ன செய்தாய்" என்று கேட்காமல் தங்களையே தாங்கள் ஏமாற்றிக் கொண்டு இப்பொழுது "வட்டுக்கோட்டை தீர்மானம் 2" நிறைவேற்றுகிறோம்.

போருக்குப் பிறகு, தமிழ் தேசியத்துக்காகப் புறப்பட்டவை பல .அவை எல்லாம் எழுந்ததும் வளர்வதும் இந்த ஒற்றுமையீனத்தால்தான். தெரிந்தும் தொடர்ந்தும் அதிலேயே தமிழ் மக்கள் பயணம் செய்கிறார்கள்.

(வளரும்...)



சீனப் பெருஞ்சுவர்

# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 35

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

வட இலங்கையில் பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கான பரீட்சைகள் மெய்நிகர் முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் ஒரு வித மனதிருப்தியில் உள்ளனர். மகாபாரதப் போரில், ஈடுபட்ட இரு தரப்பினரும் பல்வேறு போர்வியூகங் களை அமைத்து போரை எதிர்கொண்டமை போன்று ஆசிரியர் பரீட்சையுணர்வை ஏற்படுத்த பல்வேறு உத்திகளைக் கையாள மாணவர்களும் அந்த உத்தி களை பல்வேறு கோணங்களில் எதிர் கொண்டார்கள், இந்த மெய்நிகர் பரீட்சை ஆசிரியர் மற்றும் மாண வர்களுக்கு புதிய அனுபவங்களை கொடுத்திருக் கின்றன. பரீட்சை பற்றிய ஏற்கனவே இருந்த எண் ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கின்றன.

பரீட்சை மண்டபத்தில் இருந்து நேரடியாகவே பரீட்சை எழுதுவது போன்று சில மாணவர்கள் கட்ட ளைகளை ஏற்று கட்டுப்பாட்டுடன் வீட்டிலிருந்து பரீட் சையை செய்துள்ளனர். வேறு சிலர் இந்த மெய்நிகர் பரீட்சைகளை திறந்த புத்தகப் பரீட்சையாக கருதி புத்த கங்களை அருகில் வைத்து கேள்விகளுக்கேற்ப புத்தகங்களில் உடனுக்குடன் விடைகளைத் தேடி எழுதியுள்ளார்கள். வேறு பலர் அதனையே இன்னும் இலகுவாக்க நிகழ்நிலை மெய்நிகர் புத்தகங்களை இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து தரப்பட்டுள்ள கேள்விக்கான விடையினை கணனியிலேயே தேடல் செய்து விடையைக் கண்டுபிடித்து எழுதினார்கள். இதில் புத்தகத்தை அருகில் வைத்து புரட்ட வேண்டியி ருக்கவில்லை. இவ்வாறான பல உத்திகளை பரீட் சையை எதிர்கொள்ள மாணவர்கள் பயன்படுத்தினர். இதன் பல்வேறுபட்ட விவாதிக்க வேண்டிய விளைவு களிற்கு அப்பால் மாணவர்களிற்கு நடைபெற்று முடிந்த பரீட்சை மூலம் தமது பாட எல்லைகளை வரையறை செய்து மீட்டுப்பார்த்து பல்வேறு மட்டங்களில் தேடி அறிவைப்பெற்றுக்கொண்டனர் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சையின் முக்கிய நோக்கமும் இதுவாகவே இருக்க வேண்டும் எனலாம். எது எவ்வாறாயினும் மெய்நிகர் வகுப்புக் கற்றல் என் பது பல புதிய சிந்தனைகளையும் சவால்களையும் எமக்கு விட்டுச் செல்கின்றன.

மெய்நிகர் தளம் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் புதிய தொழில்நுட்பங்கள் தினமும் ஆக்கிரமிக்கும் விதம் ஆச்சரியமாக இருக்கிறது.



இன்று மெய்நிகர் கற்றலின் மிகப்பெரிய நன்மை களில் ஒன்று, இது கல்வியை முன்னெப்போதையும் விட அணுகக்கூடியதாக ஆக்குகிறது என்பதாகும்.

கொவிட் -19 தொற்றுநோயின் தாக்கத்தில் உலகம் மூழ்கியிருந்தாலும், மெய்நிகர் கற்றல் திட்டங்கள் எண் ணற்ற மாணவர்களுக்கான கற்றலுக்கான புதிய இலகுவான விதிமுறைகளை உருவாக்கி புரட்சியை ஏற்படுத்துகிறது. முதல் முறையாக மெய்நிகர் கற்ற லுக்கு முயற்சி செய்யும் மாணவர்கள் சில சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதையும் ஏற்றுக்கொண் டாக வேண்டும். இருப்பினும் பல நன்மைகள் உள் ளன. மெய்நிகர் கல்வியின் ‘புதிய இயல்பு’ கல்விப்புரட் சியை ஏற்படுத்துகிறது. முதலில் அது கொரோனா வைரஸ் நெருக்கடியின் போது சில அவசியமான அல்லது தற்காலிகத் தீர்வாக இருந்தது. ஆனால் இப் போது மெய்நிகர் கற்றலை தொடர்கின்ற போதும் அத னைச் செயல்படுத்தும் போதும் மெய்நிகர் கல்வியின் எதிர்காலத்தைப் பற்றிய சில சுவாரஸ்யமான காட்சி களை காணமுடிகிறது. மெய்நிகர் கற்பித்தலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் அதைச் சிறப்பாக மாற்றும் புதிய தொழில்நுட்பங்கள் வியப் பிலார்த்துகின்றன.

### 1. புதிய தொழில்நுட்பத்துடனான மேம்பட்ட மெய்நிகர் வகுப்பறை

பல்வேறு தொழில்நுட்பங்களின் விரைவான வளர்ச்சியானது **VEDAMO** போன்ற புதிய தொழில் நுட்ப வசதி கொண்ட மேம்பட்ட மெய்நிகர் கற்பித்தல் தளங்களை உருவாக்குவதை சாத்தியமாக்கியுள்ளது.




**VEDAMO** ஒரு மெய்நிகர் வகுப்பறை ஒரு இணைய வழி நேரடிக் கற்பித்தல் தளமாகும். இது வீடியோ கான்பரன்சிங் மற்றும் குழு அம்சங்களை ஒருங்கிணைக் கிறது: வீடியோ கான்பரன்சிங் - ஒரே நேரத்தில் 25 பங்கேற்பாளர்களைப் பார்க்கவும் கேட்கவும முடியும். மீடியா பிளேயர் - பல்வேறு மல்டிமீடியா பொருள் களைப் பயன்படுத்த முடியும். மற்றும் நேரடி ஒன்லைன் வகுப்புகளின் போது **YouTube** வீடியோக்களைப் பகிர வும் முடியும். அங்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவர் கள் நிறைவான படிப்பு அனுபவத்திற்குத் தேவை யான அனைத்தையும் பெறமுடியும். மேலும்,மாண வர்களுக்கு ‘எல்லாம்’ இந்த வகுப்பறையில் கிடைக் கிறது. அதாவது நேரில் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது தொடக்கம் நிகழ்நேர தனிப்பட்ட வகுப்புகள் மற்றும் விளக்கக்காட்சிகள் மற் றும் பயிற்சிக்கான ஊடாடும் அம்சங்கள் மற் றும் கருவிகள், குழுப்பணி அல்லது தனிப் படிப்புக்கு தனி மெய்நிகர் இடைவெளிகளைப் பயன்படுத்துதல்வரை எல்லாம்கிடைக்கின்றன.

இந்த மேம்பட்ட மெய்நிகர் வகுப்பறை இணையவழிக் கற்பித்தலை மிகவும் வேடிக்கையாக, சுவாரஸ்யமாக, பயனுள்ள மற்றும் ஊக்கமளிக்கும் வரம்பற்ற சாத்தி யங்களை வழங்குகிறது. சமீபத்திய தொழில் நுட்பங்கள் மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் வசதி களும் நிறையவே உதவுகின்றன. மெய்நிகர் வகுப்பறை பல்வேறு சாதனங்களில் மற்றும் இணைய இணைப்பு உள்ள உலகின் எந்த இடத்திலிருந்தும் பயன்படுத்த மிகவும் எளிதானது. மெய்நிகர் படிப்பு மாணவர்களுக்கு மிகவும் ஏற்றதான தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்திற்கு முன்னெப் போதையும் விட அதிக வாய்ப்புகளை வழங்குகிறது. மெய்நிகர் கல்வியின் சமீபத்திய போக்குகள் மெய்நிகர் வகுப்பறையில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வகிபங்கிற்கு புதிய திருப்பங்களை உருவாக்குகின் றன. மெய்நிகர் வகுப்பறை ஆசிரியர்கள் மாணவர்க ளுக்கு அறிவை வழங்குவது மட்டுமல்லாமல், கற்றல் செயல்பாட்டில் அதிக ஈடுபாடு மற்றும் உள்ளடக்க உருவாக்கத்தில் அவர்கள் பங்கேற்க ஊக்குவிக்கி றார்கள்.

இன்றைய மெய்நிகர் வகுப்பறைப் போக்கை அவதானிக்கின்ற போது மெய்நிகர் வகுப்பறை பாரம் பரிய வகுப்பறையை மாற்றிவிடும் என்ற பயம் சிலருக்கு தொற்றிக் கொள்கிறது. பாரம்பரிய பழக் கத்திலிருந்து திடீரென விடுபடும் போது ஏற்றுக் கொள்ள முடியாமை இருப்பது வழமைதான், இதற்கு பதில் அநேகமாக உடனடியாக அந்தப்பயம் தேவையில்லை எனலாம். ஆனால் எதிர்காலத் தில் மெய்நிகர் கல்வியில் பாரம்பரிய வகுப்புகளு டன் இணையவழிக் கற்பித்தலை இணைக்கும் கலப்பின கற்றல் முறைகளைத் தழுவும் போக்கு வளர்ந்து வரும்.

### 2. கற்றலுக்கான நுட்பியல் அவத்தை வசதி (Virtual Reality- VR)

இணையவழிக் கற்பித்தலில் நுட்பியல் அவத்தை (VR) பயன்படுத்துவதால் மாணவர்களின் காட்சி அனு பவத்துடனான கற்றலில் அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல முடிகிறது. நுட்பியல் அவத்தை கடந்த சில ஆண்டுகளில் மேலும் மேலும் அணுகக்கூடியதாகி விட்டது. இது சந்தேகத்திற்கு இடமின்றி இணைய வழிக் கற்பித்தலில் மிகவும் சக்திவாய்ந்த கருவிக ளில் ஒன்றாகும் மற்றும் பல்வேறு பாடங்களில் ஆழ மான பாடங்களை உருவாக்குகிறது. நுட்பியல் அவத்தை காட்சிவடிவத்தை உருவாக்குகிறது மற்றும் உணர்வுபூர்வமாக மாணவர்களை மிகவும் நிறை வான கற்றல் அனுபவத்தைப் பெறச் செய்கிறது.

வரலாறு போன்ற பாடங்களை நுட்பியல் அவத்தை வளப்படுத்த முடியும். அதாவது வரலாற்றுக் காலத் தின் கட்டடக்கலை அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்கும் திறனுடன் பண்டைய கிரேக்கத்தில் ஒரு பாடத்தை கற்பிப்பதை கற்பனை செய்து பாருங்கள். பாதுகாப் பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் நிஜ வாழ்க்கை காட்சிகள் மற்றும் அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக மேலும் மேலும் பயிற்சித் திட்டங் களில் நுட்பியல் அவத்தை அதிகம ாகப் பயன்படுத்தப் படுகின்றது. இதனால் மெய்நிகர்கல்வி ஒரு மாணவ ருக்கு ஒரு இடத்தில் இருந்தபடி எல் லாவற்றையும் பெற வழிவகுக்கின்றது.

(தொடரும்....)





# கையறு நிலையில் கோட்டா அரசு; இறக்குமதிக்கும் 'கோட்டா' முறை

## சீனி, பருப்புப் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் பங்கீட்டு அடிப்படையில் இனிமேல் விநியோகமாம்

கொழும்பு, ஓகஸ்ட் 30

நாட்டின் பொருளாதாரம் கையறு நிலைக்கு சென்றுள்ள சூழலில், போதிய அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை என்ற பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் கோட்டபய ராஜபக்ஷ அரசு, இனிமேல் அத்தியாவ சியப் பொருள்களின் இறக்குமதிக்கு 'கோட்டா' முறையில் பங்கிட்டு அனுமதி வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனி, பருப்பு போன்றவற்றின் விலை கிலோ 250 ரூபா என்ற உச்சத்தைத் தொட்ட நிலையில் அத்தகைய அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில், பங்கீட்டு அடிப்படையில் சதொச மூலம் விநியோகிக்க அரசு தயாராகி வருகின்றது என்றும் கூறப்படுகிறது.

போதிய அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லை. அதனால் அத்தியாவசிய பொருளைக்கூட தேவையான அளவு இறக்குமதி செய்ய முடியாத கையறு நிலைக்குக் கோட்டாபய அரசு தள்ளப்பட்டுள்ளது.

இதனால் அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியைக் கூட கோட்டா முறையில் - பிரித்துத் தொகுதி தொகுதியாக அனுமதி வழங்கும் முறையில் - மேற்கொள்ள அரசு ஆலோசித்து வருகின்றது.

மாதத்திற்கு இவ்வளவு சீனி, இவ்வளவு பருப்பு என்று பெரு வர்த்தர்களுக்கு கோட்டா வழங்கி, அதன் மூலம் இறக்குமதிக்கான அந்நிய செலாவணி செலவாவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை அரிசி, பருப்பு, சீனி, பால்மா போன்றவற்றைக் கணிசமான அளவு அரசு இறக்குமதி செய்து, நியாய விலையில் பங்கு அடிப்படையில், வாழ்வாதாரம் குறைந்த தரப்பினருக்கு மட்டும், சதொச ஊடாகப் பங்கிட்டு வழங்குவது குறித்தும் அரசு ஆலோசித்து வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன கூறியிருக்கின்றார்.

## பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி தாமதம் ஏன் என சுரேன் ராகவன் கேள்வி!

### 'ஸேம் சைட் கோல்' அடிக்கின்றார் அவர்

யாழ். சர்வதேச விமான நிலையத்தில் பாரிய விமானங்கள் தரையிறங்கக் கூடிய வகையில் ஓடுபாதைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதி இருந்தும், அரசாங்கம் அதனை செயற்படுத்தாமல் இருக்கின்றது என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடக்கில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டுவரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் தமிழ்ப் பத்திரிகை ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் இதை குறிப்பிட்டார். வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத வகையில் இந்த காலகட்டங்களில் அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை சந்தித்து வருவதைக் குறிப்பிட வேண்டும்.

என்றாலும் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுள்ள சர்வதேச நிதி உதவியுடனான அபிவிருத்தித் திட்டங்கள் ஏன் தேங்கிக் கிடக்கின்றன என்பது எனக்குப் புரியாமல் உள்ளது. குறிப்பாக யாழ்ப்பாண சர்வதேசவிமானநிலையத்தைகுறிப்பிடமுடியும்.

அந்த விமான நிலையத்தில் பாரிய விமானங்கள் தரையிறங்க கூடிய வகையில் ஓடுபாதைகளை அபிவிருத்தி செய்வதற்கானநிதிஅரசாங்கத்திடம்இருக்கின்றது.

அதனை ஏன் செயற்படுத்தாமல் இருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது சம்பந்தமான அமைச்சர் அதில் அக்கறை செலுத்தாமல் இருக்கின்றாரா?

அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுவது அவசியம். யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் என்பது இந்திய பயணிகளுக்கானதாக மட்டுமன்றி அது சர்வதேச விமான நிலையமாக உயரும் போது, மத்திய கிழக்கில் இருந்து இந்தியாவுக்குச் செல்லும் பயணிகளுக்கான 'ட்ரான்சிஸ்ட் பொயின்ட்' ஆக அமையும் என்பதையும் அத்துடன் 'டியூட்டி ப்ரீ' வர்த்தகத்துக்கான பாரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என்பதையும் குறிப்பிட முடியும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்த விடயத்தில் கவனம் செலுத்துவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அதேவேளை, பருத்தித்துறையில் இலங்கையில் மிகப்பெரிய மீனவர் துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஏனோ மேலும் மேலும் அது தாமதமாவதற்கான காரணம் தொடர்பில் ஊடகங்களே கேள்வியெழுப்ப வேண்டும்.

சம்பந்தப்பட்ட அமைச்சர் அது தொடர்பில் சில விடயங்களைத் தெரிவித்துள்ளார். எனினும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலம் நிறைவு பெற்றுள்ள நிலையில் அத்தோடு சம்பந்தப்பட்ட அமைச்சரே தமிழ் சமூகத்திற்கும் மீனவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் அது தொடர்பில் பதிலைத் தெரிவிப்பார் என்று நான் நம்புகின்றேன்- என்றார்.

## அறுவரின் சடலங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனைவரும் கொரோனா வைரஸ் தொற்றாலேயே மரணமடைந்துள்ளனர் என்று நீர்கொழும்பு வைத்தியசாலையின் அறிக்கைகள் தெரிவிப்பதாக, கட்டான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஏ.யூ.டி குலத்திலக்க நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மரணமடைந்தவர்களில் ஆண்கள் நால்வரும் பெண்கள் இருவரும் உள்ளடங்குகின்றனர்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீடுகளுக்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## தனிவழி செல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் முன்னணி அல்லது ஐக்கிய முன்னணி என்ற பெயரிலேயே கூட்டணி மலரக்கூடும் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 - 11 - 1944



இறப்பு 29 - 08 - 2021

### சபாரத்தினம் செல்வரத்தினம்

((Retired) Walker & Sons Company, Mutwal, Colombo)

சபாரத்தினம் செல்வரத்தினம் (Walker Sons Company, Mutwal, Colombo) ஊரியாட்டி சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் செல்வரத்தினம் அவர்கள் 29/08/2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலம்சென்றவர்களான சபாரத்தினம் – இரத்தினம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வரும், காலம்சென்ற பொன்னுத்துரை சின்னம்மாவின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் பாசமிகு கணவரும், சதீஸ்குமார் (DHL GLOBAL FORWARDING LANKA Pvt Ltd), கல்பனா ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் (London), லோகராணி (Norway), பாலரத்தினம் (London), ஜீவரத்தினம் (London), யோகரத்தினம் (Colombo), ஜெயராணி (Jaffna), வசந்தராணி (America) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தர்சினி (C/Fathima MLC), மனோஜ் (Metecno Lanka Pvt Ltd) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இரத்தினேஸ்வரி, அமரர் கணேசன், பவானி, இந்திராணி, ரஜனி, இராசகுலேந்திரன், சிவராஜசூரியர், அமரர் கமலாம்பிகை, அமரர் தெய்வேந்திரன் ஆகியோரின் மைத்துனரும், அமரர் தர்மலிங்கம், ரதி ஆகியோரின் சகலனும், சாருஜன் (கொ/இந்துக்கல்லூரி), சானுஜன் (கொ/றோயல் கல்லூரி), கிருத்திக்ஸா, ஹரிணி (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஆகர்ஷா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 30.08.2021 இன்று திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு சுகாதாரமுறைப்படி தகனம் செய்யப்படும்.

0776334033 தகவல்:-குடும்பத்தினர்

## சிவப்பு சீனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதற்கமைவாக எதிர்வரும் புதன்கிழமை முதல் குறித்த விலைக்கு சிவப்பு சீனியை நுகர்வோருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

இந்நாட்டில் மாதமொன்றுக்கு 45 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இதில் 23 ஆயிரம் மெட்ரிக் தொன் சீனி மக்கள் பயன்பாட்டுக்கும் மீதமுள்ள சீனி வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

இதற்கமைவாக ஒரு நாளைக்கு 1,500 மெட்ரிக் தொன் சீனி, நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இன்று (நேற்று) மேலும் மூன்று களஞ்சியசாலைகள் சீல் வைக்கப்பட்டுள்ளன. குறித்த களஞ்சியசாலைகளில் இருந்து 600 மெட்ரிக் தொன் சீனி கைப்பற்றப்பட்டுள்ளது.

சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த களஞ்சியசாலைகளே இவ்வாறு சீல் வைக்கப் பட்டுள்ளன. நேற்று (நேற்றுமுன்தினம்) கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக 4 ஆயிரத்து 800 தொன் சீனியைப் பதுக்கி வைத்திருந்த களஞ்சியசாலையொன்று 'சீல்' வைக்கப்பட்டுள்ளது – என்றார்.

# முதல்வர் ஸ்டாலினுக்கு புளொட் நன்றி, பாராட்டு!



ஏதிலிகளாக அடைக்கலம் தேடிச் சென்று தமிழகத்தில் நீண்ட காலமாக தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கான பல்வேறு திட்டங்களைத் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்துள்ளமை தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழகத்தில், அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வாழும் எங்களுடைய மக்களின் வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்பை உறுதிசெய்யவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் என மொத்தம் 317 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுமென தமிழக முதல்வர் அறிவித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அங்கு அகதிகளாக வாழுகின்ற எங்களுடைய மக்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கு இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை ஒரே தடவையில் ஒதுக்கி, வேறு எவருமே செய்யாத அளவுக்கு, அவர்களுடைய வாழ்வை மேம்படுத்துவதில் முதல்வர் காட்டுகின்ற அக்கறை எம்மை மனம் நெகிழ வைத்துள்ளது.

கடந்த காலங்களிலும் பல உதவிகளை முதல்வர் செய்திருக்கின்றார். அதேபோல் தொடர்ந்தும் செய்வார் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது. முதல்வரது இந்தச் செயற்பாடு தமிழகத் தமிழர்களில் மாத்திரமல்ல உலகத்தில் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்கள் மீதும் உங்களுக்குள்ள கரிசனையை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அநுராதபுரம் வயோதிபர் இல்லத்தில் 44 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

அநுராதபுரம் – சாலியபுர பிரதேசத்தில் அரசால் நடத்திச் செல்லப்படும் வயோதிபர் இல்லத்தில் 44 பேருக்குக் கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வயோதிபர் இல்லத்தில் 298 வயோதிபர்கள் உள்ளனர். அவர்களில் மூவருக்குக் கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதையடுத்து ஏனைய வயோதிபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேலும் 41 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான 41 பேரில் 21 பேர் அநுராதபுரம் மாவட்ட வைத்தியசாலை மற்றும் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் வயோதிபர் இல்லத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# பாதாள உலகக்குழு பிரபலம் கொரோனாத் தொற்றால் சாவு


பிரபல பாதாள உலகக்குழு உறுப்பினர் பொட்ட நௌஃபர் எனப்படும் மொஹமட் நியாஸ் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூஸா சிறைச்சாலையில் இருந்து வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளார். பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது. இவர் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கின் பிரதான சந்தேக நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி செலுத்தியதாக அட்டையில் குறித்து விட்டு ஏற்றாததால் பதற்றம்

சுகாதார அதிகாரிகள் கொவிட் தடுப்பூசிகளை வழங்குவதை நிறுத்தியதால் காலி - தொடந்துவ பகுதியில் உள்ள தடுப்பூசி மையத்தில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் அதிகாரிகள் தடுப்பூசிகள் வழங்குவதை நிறுத்தி விட்டு, ரத்கம சுகாதார மருத்துவ அதிகாரி பகுதியில் பலருக்குத் தடுப்பூசிகளை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



சிலரின் தடுப்பூசி அட்டையில் தடுப்பூசி கொடுக்கப்பட்டதாக குறிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு தடுப்பூசி போடப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# பெண்ணின் படங்களை தவறாக சித்திரித்து கப்பம்பெற முயன்ற இருவர் கைதாகினர்

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் பெண் ஒருவரின் படங்களை தவறாக சித்திரித்து அவரிடம் கப்பமாக பணம் பெற முயற்சித்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணின் படத்தை பேஸ்புக் ஊடாக பெற்றுக் கொண்டு அந்த படத்தை நிர்வாணப் படமாக மாற்றி கப்பம் பெறுவதற்கு சந்தேக நபர்கள் முயற்சித்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடம் இருந்த இரண்டு கணினிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகள் இரண்டை பொலிஸார் தங்கள் பொறுப்பில் எடுத்துள்ளனர்.

அவர்கள் பொலன்நறுவை மற்றும் அங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 20, 23 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. செந்திலப்பதி எனப் போற்றப்படும் முருகப் பெருமானின் முதற்கோவிலாகப் போற்றப்படும் குமராலயம் எது?**

............................................................

**2. சைவ வினா விடையை எழுதியவர் யார்?**

............................................................

**3. யாழ்ப்பாண வைபவ மாலையின் பதிப்பாசிரியர் யார்?**

............................................................

**4. நல்லைக் கந்தனின் குபேர வாயில் கும்பாபிசேகம் எந்த ஆண்டு இடம்பெற்றது?**

............................................................

**5. அபிராமி அந்தாதியைப் பாடியவர் யார்?**

............................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

17

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------
4. பாடசாலை : ------------------------------------------------
5. முகவரி : ------------------------------------------------

..........................................
கையொப்பம்

# 2 ஆவது தடுப்பூசி வழங்காததால் கிழக்கில் 486 பேர் உயிரிழந்தனர்!

## இதற்கு யார் பொறுப்பு என்கிறார் இரா. சாணக்கியன்

இலங்கையில் சுகாதார அமைச்சில் கொரோனா தொடர்பான புள்ளிவிவரங்களுக்கும் கிழக்கு மாகாண சுகாதார பணிமனை புள்ளி விவரங்களுக்கும் இடையே பாரிய முரண்பாடு. எனவே இந்த மோசடி நடவடிக்கை எதற்காக? அதேவேளை கிழக்கில் இரண்டாவது தடுப்பூசி வழங்காததால் கொரோனாவால் உயிரிழந்த 486 பேரின் உயிரிழப்புக்கு யார் பொறுப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு மட்டு ஊடக மையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பாரிய ஒரு சவாலான காலப் பகுதியில் நாங்கள் இருக்கின்றோம். உண்மையிலே இன்று அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இருந்து எங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

இலங்கையிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் கொரோனாத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக சுகாதார அமைச்சில் ஆராய்கின்ற பிரிவு இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது அலையில் நோயாளர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 11 ஆகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் 2 ஆயிரத்து 602 ஆகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் 2 ஆயிரத்து 6 ஆகவும் காட்டப்படுகின்றது. அதேவேளை கிழக்கிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தரவுகளைப் பார்த்தால் மட்டக்களப்பில் 15 ஆயிரத்து 883, கல்முனையில் 6 ஆயிரத்து 231, திருகோணமலையில் 8 ஆயிரத்து 617 ஆகக் காட்டப்படுகின்றது. எனவே இவ்வாறான மோசடியான நடவடிக்கை இதனை எவ்வாறு நம்பமுடியும்?

இவ்வாறு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில், இவ்வாறு என்றால் யுத்தத்திலே உயிரிழந்தவர்கள் யுத்தகாலத்திலே கொல்லப்பட்டவர்கள் புள்ளி விவரங்களை எப்படி நம்புவது? இதே அரசாங்கம் தான் அந்த நேரத்திலே இருந்தது. இவை அனைத்துக்கும் காரணம் என்ன? தடுப்பூசி நேரத்துக்கு வழங்காதது தான் உயிரிழப்புக்குக் காரணம். அவ்வாறே உயிரிழந்த



வர்களில் 88 வீதமா னவர்கள் இரண்டு தடுப்பூசி கிடைக்காதவர்கள். அதில் இரண்டு தடுப்பூசியை பெற்ற 12 வீதமானோரே உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு இருக்கும்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் இரண்டாவது தடுப்பூசி ஒன்று கூட கிடைக்கவில்லை. அவ்வாறு திருகோணமலையிலும் ஒன்று கூட பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் மட்டக்களப்பில் மாத்திரம் 32 வீதம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் நோக்கம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவேண்டும் டொலரை பாதுகாக்கவேண்டும் என மேல்மாகாணத்தில் இருக்கின்ற 30 வயதுக்கும் 60 வயதுக்குமிடையில் தடுப்பூசி வழங்க வேண்டும் என் பதற்காக அங்கு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் கிழக்கில் இரண்டாவது தடுப்பூசி வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி என்ன செய்தார்? அனைத்து மக்களுக்கும் பொதுவான சமனான தலைவராக இருக்கவேண்டும். கிழக்கு மாகாணத்தில் இருப்பவர்கள் மக்கள் இல்லையா? இதில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்கின்றனர் அவர்கள் மொட்டுக் கட்சிக்கும் ஜனாதிபதிக்கும் வாக்களித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 211 பேரையும் திருகோணமலையில் 135 பேரையும், கல்முனையில் 140 பேரையும் இழந்துள்ளோம். இந்த உயிர்களுக்கு எல்லாம் யார் பொறுப்பு? இந்த முடக்கம் ஒரு போலியான முடக்கம். - என்றார்.

# அரச ஊழியரின் சம்பளம் 5 வீதமேனும் குறையாது!

## அமைச்சர் மஹிந்த அமரவீர திட்டவட்டம்



அரசாங்கம் பொருளாதார சிக்கல்களை எதிர்கொண்டாலும், அரச ஊழியர்களின் சம்பளத்தில் ஐந்து சதம் கூட கொவிட் நிதிக்காகக் குறைக்கப்படாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மேலதிக நேரம் மற்றும் கூட்டு கொடுப்பனவுகள் போன்ற கொடுப்பனவுகளில் தாக்கம் ஏற்படலாம் என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். சுற்றுச்சூழல் அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

அரசாங்கம் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்கிறது. குறிப்பாக அந்நிய செலாவணி பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். கொவிட் 19 தொற்றுநோயால் எங்கள் ஏற்றுமதி வருவாய் ஓரளவு குறைந்துவிட்டாலும், அந்த சுமையைப் பொதுமக்களுக்கு வழங்க நாங்கள் தயாராக இல்லை.


இந்தத் தொற்றுநோயுடன் பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பது தொடர்பாக நாங்கள் பெரும்பாலான நேரத்தை அமைச்சரவை விவாதங்களில் செலவிடுகிறோம். அரசு பொது ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதம் குறைக்கப்போகிறது என்று சிலர் கருத்தை பரப்பியுள்ளனர்.

ஆனால் இந்த கடினமான நேரத்தில் பொது ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து ஐந்து சதம் கூட நாங்கள் கழிக்க மாட்டோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் கூட்டு கொடுப்பனவு போன்ற பிற சலுகைகள் பாதிக்கப்படலாம். இருப்பினும், கொரோனா வைரஸ் காரணமாக அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. சில அலுவலகங்கள் நிறுவனத் தலைவரின் விருப்பப் படி ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்படுகின்றனர். எனவே, மிகவும் அத்தியாவசியமானவர்கள் மட்டுமே அலுவலக வேலைக்கு அழைக்கப்படுகிறார்கள். - என அவர் மேலும் கூறியுள்ளார்.

# சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவுக்கு நேற்று இறுதி நிகழ்வும் நிரந்தரப் பிரியாவிடையும்













கொரோனாவுக்குப் பலியான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா அவர்களுடைய இறுதி ஊர்வலம் நேற்றுக் காலை கொழும்பு பொரளை மயானத்தில் இந்து முறைப்படி நடைபெற்றது.

கொரோனா சட்ட விதிகளுக்கு அமைய சட்டத்தரணிகள், நீதிவான்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொண்டு, சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் நினைவில் பங்குகொண்டு அவருக்கு நிரந்தரப் பிரியாவிடை அளித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2021 இல் வெளியிடப்பெற்றது.